Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 25 புதன்கிழமை (09.01.2013) பக்கங்கள் 20 ஓசை – 101













## உல்லாச வாழ்க்கை நடத்துபவர்களின் சுயஇலாப அரசியலில் விழவேண்டாம்

### யாழ். பல்கலை மாணவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் அறிவுரை



பல்கலைக்கழக மாணவர்களை முன்வைத்து சிலர் சுய இலாப அரசியல் நடத்துவதற்கு காத்திருக்கின்றார்கள். எனவே இவ்வாறானவர்களின் இந்த அரசியலுக்குள் மாணவர்கள் வீழ்ந்து விடக்கூடாதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மாணவர்களே, நான் உங்களிடமிருந்து எதுவித 19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் ஆரம்பம்

### மாணவர் வரவு குறைவு

யாழ். பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாணவர் வருகை மிகவும் குறைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக் கழகத்தின் சில வகுப்புகளுக்கான விரிவுரைகள் மட்டுமே நடைபெற்றதாகவும், இதனால் ஏனைய பாடநெறிகளில் பயிலும் மாணவர்கள் சிலர் பல்கலைக் கழகத்திற்கு வந்துவிட்டுச் சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். பல்கலைக்கழகச் செயற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்படுவது பற்றிய அறிவித்தல் நேற்று முன்தினமே அறிவிக்கப்பட்டது. இதனால், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் விரிவுரைகளுக்கு வருகை தருவது தாமதமாகியிருப்பதாகப் பல்கலைக் கழக வட்டாரங்கள் 19 ஆம் பக்கம் பார்க்க

# "வாழ்வின் எழுச்சி" சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேறியது

(கொழும்பு)

'திவிநெகும' எனப்படும் வாழ்வின் எழுச்சித்திட்டத்திற்கான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக 160 வாக்குகளும் எதிராக 53 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

திவிநெகும சட்டமூலம் நாடாளுமன்றத்தில் 107 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திவிநெகும சட்டமூலத்தில் சரத்துக்கள் சிலவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்திருந்தது. இதற்கமைய கடந்த நவம்பர் மாதம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால், திவிநெகும சட்டம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அதனை நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொளவதற்கு கடந்த டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களது மாநாட்டில் இணக்கம் காணப்பட்டது.

சிறுபான்மைக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகியன இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழத் 19 ஆம் பக்கம் பார்க்க

## அவசர கூட்டத்திற்கு சபாநாயகருக்கு அழைப்பு

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றை மற்றொருமுறை கூட்டுமாறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கடிதமொன்றை கையளித்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர 19 ஆம் பக்கம் பார்க்க

## குற்றப் பிரேரணையை வாபஸ்பெறுமாறு பேரணி

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா மீதான குற்றப் பிரேரணையை வாபஸ் பெறுமாறு வலியுறுத்தி ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த பேரணியொன்று கொழும்பில் நேற்று நடைபெற்றது. பொரளை கெம்பல் மைதானத்தில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேரணி ஹைட்பார்க் வரை பயணித்தது. 19 ஆம் பக்கம் பார்க்க

## நியமனம் பெறாத பட்டதாரிகள் விபரங்களை அனுப்ப அறிவிப்பு

பட்டதாரி பயிலுனர் சேவையில் கடந்த வருடம் உள்வாங்கப்படாத பட்டதாரிகள் தமது விபரங்களை வடமாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் 19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் கனமழை பொழிவு இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று அதிகாலை முதல் ஆரம்பித்த கனமழை காரணமாக வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வெள்ளப்பாதிப்புக்கள் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள தாள்நிலப் பகுதிகளில் உள்ள குடும்பங்கள் பல பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரம் தற்போது பிரதேச செயலகங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலும் கனமழை ஆரம்பித்து தொடர்ந்து பெய்து வருவதால் மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதில் கனகராயன் குளம் நிரம்பியுள்ளதுடன் பெருக்கெடுக்கக் கூடிய சூழல் ஏற்படுவதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். நேற்று காலை 11.45 19 ஆம் பக்கம் பார்க்க

## சீரற்ற காலநிலை காரணமாக ஜனாதிபதியின் யாழ். விஜயம் இரத்து

தேசிய பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொள்ளவிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தினை மேற்கொள்ளவிருந்த ஜனாதிபதி, நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தனது விஜயத்தை இரத்துச் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதியின் இந்த விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதை அமைச்சர் 19 ஆம் பக்கம் பார்க்க




கொழும்பு, பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் உத்தியோக பூர்வ வீட்டுக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கோல்டன் கீ நிறுவனத்தில் வைப்பிலிட்டோர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டோரே பேரணியின் நிறைவில் பிரதம நீதியரசரின் வீட்டின் முன்னால் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# யாழ். மாநகர சபை கீதத்தை மேலும் செழுமைப்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் கீதத்தில் பௌத்த மதக் கருத்தும் இடம்பெறவேண்டும் என்பது எமது கட்சி மாநாகர சபை உறுப்பினர் மங்களநேசனது தனிப்பட்ட கருத்து. அதுகட்சியின் கருத்தல்ல என்று யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையின் மன்றக் கீதத்தை கருத்தாடல் மிக்க வகையில் மீள்பதிவு செய்வது சம்பந்தமாக விசேட கூட்டமொன்று யாழ். மாநகர சபை முதல்வர் தலைமையில் மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் சம்பந்தமாக நேற்று சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் குறித்து மறுப்புத் தெரிவித்து விளக்கமளிக்கையிலேயே யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் ஒவ்வொவரும் தமது கருத்தைத் தெரிவிக்க சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த வகையில் மாநகர சபை உறுப்பினர் மங்களநேசன் மாநகர சபை கீதத்தில் பௌத்த மதக் கருத்தும் இடம்பெறவேண்டும் என்று தெரிவித்திருந்தார். அது அவரது தனிப்பட்ட கருத்து. அது கட்சியின் கருத்தல்ல.

அவரது கருத்து மாநகர சபை உறுப்பினர்களுடனும் புத்திஜீவிகளுடனும் கலந்தாலோசிக்கப்படும். அல்லது கருத்தில் எடுக்கப்படும். அவ்வளவுதான். அதை விடுத்து எழுந்தமானத்தில் மன்ற கீதத்தை மாற்றிவிடமுடியாது.

அவ்வாறு செய்யவேண்டிய தேவை முதல்வருக்கு இல்லை. அத்துடன் மங்களநேசனின் இந்தக் கருத்தை எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் எதிர்த்ததாகவும் பத்திரிகைச் செய்தி வெளியாகியிருந்தது. உண்மையில் அவ்வாறு எந்தவொரு உறுப்பினரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

மன்றக் கீதத்தை தெளிவாகவும் தமிழ்ப் பிழையின்றியும் தற்கால இசையில் செழுமைப்படுத்த வேண்டும் என்பதே இந்த விசேட கூட்டத்தின் நோக்கமாக இருந்தது. இந்த நோக்கில் மன்ற கீதத்தை உருவாக்குவதற்கு உறுப்பினர்களிடையே ஒரு கருத்து நிலவியதாகவும் தெரிவித்த முதல்வர் குறித்த விடயத்தை விடுத்து குறித்த பத்திரிகைகள் வேண்டுமென்றே குழப்பத்தை உண்டுபண்ண எண்ணியிருப்பது அவை வெளியிட்ட செய்திகளில் புலனாகியிருப்பதாகவும் தெரிவித்தார். (பா)

# வயோதிபரின் சடலம் மீட்பு


(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் நஞ்சருந்தி தற்கொலை செய்ததாகக் கருதப்படும் வயோதிபர் ஒருவரது சடலம் நேற்று முற்பகல் நல்லூர் குறுக்குத் தெரு இலக்கம் 91 இல் அமைந்துள்ள காணி ஒன்றின் கிணற்றின் வெளிப் பகுதியில் இருந்து யாழ். பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நல்லூர் செட்டித் தெருவில் வசித்து வந்த சமாதான நீதவான் கணபதிப்பிள்ளை ஜெகசோதி (வயது - 7!) என்பவரது சடலமே மேற்படி பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபரது மைத்துனருக்குச் சொந்தமான காணியினை அடிக்கடி இவர் வந்து பார்வையிட்டுச் செல்வது வழமை எனவும் இவ்வாறு நேற்று முன்தினம் குறித்த நபர் மது அருந்திய நிலையில் காணப்பட்டதாகவும் அதற்குப் பின்னர் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் அந்த வளவில் அமைந்துள்ள கிணற்றின் பகுதியில் (வெளியே) இறந்து கிடக்கக் காணப்பட்டதாக அவரது மைத்துனர் தெரிவித்துள்ளார்.

இவரது சைக்கிளும் அந்த வளவில் காணப்படும் அதே வேளை அருகே நஞ்சுப் போத்தலும் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)





வலி. கிழக்குப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் கதிரிப்பாய், தம்பாலை, வளலாய் கிராமங்களைச் சேர்ந்த 45 குடும்பங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க செம்பிறைச் சம்மேளனம் 20 மில்லியன் ரூபா செலவில் மலசலகூடங்களை அமைத்து வழங்கியுள்ளது. இக்குடும்பங்களுக்கு மலசலகூட பாவனைப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் சுகாதாரப் பரிசோதகர் எஸ். சிவதர்சன் உரையாற்றுவதையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவுத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் பயனாளி ஒருவருக்கு மலசலகூட பாவனைப் பொருட்களைக் கையளிப்பதையும் காணலாம். (01)


# வங்களாவடி முருகன் ஆலயத்தில் அன்னதான மடம் அமைக்க முடிவு

(வேலணை)

வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் மகேந்திரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போது ஆலயத்திற்கு முன்னால் கட்டி அரைகுறையாக இருந்துவருகின்ற மண்டபத்தினைப் புனரமைத்து அடுத்து வருகின்ற திருவிழாக் காலங்களில் ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்ற தீர்மானமும் மண்டபத்திற்கு அருகாமையில் நீர்த்தாங்கி ஒன்றினையும் கட்டி முடிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (05)

# கால்நடை மருத்துவர் அலுவலகம் திறக்கப்படுவது எப்போது?



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கால்நடை மருத்துவர் காரியாலயம் நாவல் மடத்தடிப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளபோதிலும் அக்கட்டடம் இதுவரை திறக்கப்படவில்லை என பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இச்சபைக் கட்டடத்தை திறப்பதற்கு மின்சார வேலைகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இதனாலேயே இச்சபைக் கட்டட வேலைகள் அனைத்தும் முடிவடைந்த நிலையிலும் இக்கட்டடம் திறக்கப்படாமல் உள்ளதாக கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும் இக்கட்டடம் திறக்கப்பட்டால் கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் பெரும் பயனடைவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

## கால்நடைகளை பதிவுசெய்ய கோரிக்கை

(கரணவாய்)

கர்வெட்டி பிரதேசத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் தமது கால்நடையான மாடுகளை செய்து அவற்றின் காதுகளில் பதிவு இலக்கம் இருக்க வேண்டும் என அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக மாடுகள் திரியும் நிலையில் இம்மாடுகள் கால் நடை சபையில் கால்நடை சபையால் பதிவு செய்யப்படவேண்டும் எனவும் பதிவு செய்தற்கு அடையாளமாக பதிவு இலக்கம் மாடுகளின் காதுகளில் இருக்கவேண்டும் எனவும் அவ்வாறு இலக்கத் தகடு இல்லாத மாடுகள் பிடிக்கப்பட்டு ஏலத்தில் விடப்படும் எனவும் கால்நடை வைத்திய அதிகாரி மக்களுக்குத் தெரியப் படுத்தியுள்ளார்.

## தங்கச் சங்கிலி திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பில் முன்பள்ளி ஆசிரியர் ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடர்கள் அறுத்தெடுத்துள்ளனர்.

நேற்று மதியம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதியால் சென்றுகொண்டிருந்த இந்த ஆசிரியரின் தங்கச்சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அறுத்துச்சென்றுள்ளனர்.

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச்சங்க முன்பள்ளியில் கடமையாற்றும் ப.பவித்திரா என்ற ஆசிரியையின் சங்கிலி அறுக்கப்பட்டது குறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.


**யாழ்ப்பாணம் மாநகர சபை**

## ஆதன வரி அறிவித்தல் 2013

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி யாழ்ப்பாணம் மாநகர சபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம், 247 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மீள்மதிப்பீட்டின் பிரகாரம் புதிய ஆதனவரி அறவீடுகள் 2013.01.01 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2013 ஆம் ஆண்டிற்கான வீதவரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாய தவணைகளில் 2013 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜுன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதி களன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

2013 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வருடாந்த வீத வரிகள் செலுத்தப்பட்டால் ஒரு பத்து சதவீதம் (10%) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாக உள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய வரி செலுத்தப்பட்டால் ஒரு ஐந்து சதவீதம் (5%) கழிவு அனுமதிக்கப்படும்.

மேற்கூறப்பட்ட பந்தி 3 இல் குறிப்பிட்ட உரிய திகதிகளுக்கு முன்பு குறித்த வீத வரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது பதினைந்து சதவீதத்திலும் (15%) ஏனைய இடங்கள் மீது இருபது சத வீதத்திலும் (20%) விறாந்துச் செலவு அறவிடப்படும்.

2013 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகர ஆதனவரிப் பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதன விபரங்களைத் தெரிவித்து 2013 ஆம் ஆண்டு ஆதனவரியினைத் தாமதமின்றிச் செலுத்தமுடியும்.


**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,**
**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

**மாநகர அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**2013.01.08**

(C/2285)

புறநெகும திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் கடந்த சனிக்கிழமை கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள ஆளுநரின் உப அலுவலகத்தில் வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது . இக்கூட்டத்தில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகு மற்றும் வட மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும் கலந்துகொண்டு திட்டம் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.





# யாழில் 4679 சிறுவர்கள் தந்தையை இழந்துள்ளனர்

## மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் 4 ஆயிரத்து 679 சிறுவர்கள் தந்தையை இழந்துள்ளதாகவும் 2011 ஆம் ஆண்டு 5947 சிறுவர்கள் தந்தையை இழந்துள்ளதாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் 2012 ஆம் ஆண்டு எண்ணிக்கை குறைந்துள்ளதாக யாழ். மாவட்ட செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி கடந்த 2012 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலக பிரிவுகள் உளளடங்கலாக குறித்த எண்ணிக்கையைச் சேர்ந்த சிறுவர்கள் தந்தையை இழந்துள்ளனர்.

இதில் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் 101 சிறுவர்களும், வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 226 சிறுவர்களும், ஊர்காவற்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 179 சிறுவர்களும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 123 சிறுவர்களும், யாழ. பிரதேச செயலர் பிரிவில் 381 சிறுவர்களும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 301 சிறுவர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

மேலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 530 சிறுவர்களும், சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 346 சிறுவர்களும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 503 சிறுவர்களும், தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் 364 சிறுவர்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 180 சிறுவர்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 551 சிறுவர்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 354 சிறுவர்களும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 461 சிறுவர்களும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 73 சிறுவர்களும் தந்தையை இழந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாக செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (பா)

# அங்குரார்ப்பணம்

(வேலணை)

வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலங்களிலும் ஆலயத் திருவிழா காலங்களிலும் சகல அடியார்களுக்கும் அன்னதானம் வழங்கும் வகையில் அன்னதான சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் உறுப்பினர்களில் தல்லவராக சு.திசநாயகம் பிள்ளை, செயலாளராக க.பிரதீபன், பொருளாளராக செ.பரம்சோதிநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (05)

# ஆளுநருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து பௌத்த கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் இரண்டாவது தேசிய மொழிக்கான கல்லூரி மாணவர்கள் வடமாகாண ஆளுநருடனான சந்திப்பு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆளுநர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 2013 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது மொழிக்கற்கை நெறி தொடர்பாக மாணவர்களால் விளக்கமளிக்கப்படவுள்ளது.

மேலும் இரண்டாவது மொழிக் கற்கைநெறி தொடர்பாக நோக்கமும் இலக்கும் பற்றிய கருத்துரையை முன்னாள் தேசிய கல்வியற் கல்லூரிகளின் பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்க வழங்கவுள்ளார்.

# புதிய நிர்வாகத்தெரிவு

(வேலணை)

வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இளைப்பாறிச் சென்றுள்ள வேலணை பிரதேச சபையினது முன்னாள் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய பரிபாலன சபையினது நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக சு.திசநாயகம் பிளளை, உபதலைவர்களாக செபரம்சோதிநாதன, ஆ.அருமைநாயகம், உப செயலாளராக திருமதி ஞானம் சிவநாதன், பொருளாளராக செ.சந்திரசேகரம், செயலாளராக கை.மகேந்திரலிங்கம் மற்றும் 20 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (05)

# தொழிற்சங்க சம்மேளனம் அமைப்பதற்கான கூட்டம்

(கிளிநொச்சி)

வட மாகாண சபையின் கீழ் கடமையாற்றும் பதவிநிலை வெளிக்கள உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொழிற் சங்க சம்மேளனம் அமைப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிககிழமை காலை 10 மணிக்கு யாழ ஆரியகுளம் சந்தி புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஏற்கனவே சென்ற மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றது. அதில் கலந்துரையாடி எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரமே இக் கூட்டம் அனைதது உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியதாக நடைபெறவுள்ளது.

சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் வட மாகாணத்திலுள்ள பதவி நிலை வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கென நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய சேவைப் பிரமாணக் குறிப்பினால் எதிர் காலத்தில் ஏற்படவுள்ள பாதிப்புக் குறித்து இதில் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன் சமூக சேவைகள் உத்தியோகத்தர்,, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பணபாட்டு உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகியோரை உள்ளடக்கியதாக தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு மேற்குறித்த அனைத்து உத்தியோகததர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பன கடிதங்கள் உரிய அலுவலர்களுக்கு தனிததனியாக ஏற்கனவே தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

# ஆனந்த வாழ்வு தரும் ஆஞ்சநேயர்



## நாளை ஜெயந்தி தினம்

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான காத்தற்கடவுள் ஸ்ரீ மகா விஷ்ணுவின் அவதாரமான இராம பிரானின் அன்புக்குப் பாத்திரமான ஆஞ்சநேயருக்கு நாளை ஜெயந்திதினம். தம்மை வழிபடும் அடியார் பெருமககளுக்கு ஆனந்த வாழ்வு தரும் ஆஞ்சநேயர் சுவாமிக்கு அனுமன் மாருதி என்றும் பெயர்கள் உண்டு. இன்று அவரை வழிபட்டால் கல்வியும் ஞானமும் கைவரப் பெறும். வாயுபுத்திரராகிய இவர் மிகுநத பராக்கிரமமும் பலமும் கொண்ட ஓர் உயர்ந்த உன்னத தெய்வமாவார்.

நம்பிக்கையுடன் வழிபடுபவர்களை ஒரு போதும் கைவிடமாட்டார். இவரை முற்றுமுழுதாக நம்பிவழிபட்டால் கல்வி, அறிவு, செல்வம், துணிவு புகழ், கவனம் ஆரோக்கியம், சொல்வன்மை என்பன கிடைக்கும்.ஆஞ்சநேயர் சிரஞ்சீவி என்று போற்றப்படுபவர்.

அதாவது என்றும் அழியாதவர் என்று பொருள. அஞ்சனை வயிற்றிலே அவதரித்த இவர் இராவணனையே எதிர்த்துவெற்றி ஈட்டியவர்.இராமநாமம் இவருக்கு வெகுபிரியம். எந்நேரமும் ஸ்ரீராம நாமத்தை உச்சரித்து வழிபட்டவண்ணம் இருக்கின்ற இவர் யார் யார் இராமநாமத்தைப்பக்தியோடு சொல்வார் களே அவர்களுக் கெல்லாம் நீண்ட ஆயுட் பலத்தையும் சகல செளபாக்கி யங்களையும் அள்ளிக் கொடுப்பார்.

ஸ்ரீராமரையும் சீதாபிராட்டி யாரையும் நெஞ்சிலே வைத்துப்பூஜிப்பதை உணர்த்தும் முகமாக தன்னுடைய மார்பைப் பிளந்து காட்டிய பெரும் பக்தர். அன்புக்கும் பக்திக்கும் நட்புக்கும் இலக் கணமான இவர் விஸ்வரூபம் எடுக்கும் சக்தியுளளவர். இவரை வெற்றியாக்கும் தெய்வம் என்று பக்தர்கள் போற்றிப்புகழ்ந்து வழிபாடியிற்றுவர்.

கலாபூஷணம் :இராசையா ஸ்ரீதரன்

# நிறுவுனர் உதயநாளும் பரிசளிப்பு விழாவும்

(சுன்னாகம்)

சுன்னாகம் வாழ்வகத்தின் நிறுவுனர் உதயநாளும் பரிசுத்தினமும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.45 மணியளவில் வாழ்வக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்வகத்தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையின் வைத்திய கலாநிதி நாளாயினி ஜெகதீசன், வலி தெற்கு பிரதேச சபை தலைவர் தி.பிரகாஸ் விவசாயத்திணைக்கள ஓய்வுநிலை உதவி விவசாய பணிப்பாளர் ச.சிவநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவிருந்தினர்களாக தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன்,மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணப்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத்தின் உடற்கல்வி கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த அனைத்து மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று புதன்கிழமை அரசடி வீதியிலுள்ள யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. குறித்த மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## யதார்த்தம் அறிய வேண்டும்!

எதிர்பார்த்தது போலவே 'மார்ச் மாத மாயமானை'க் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். இது எத்தனையாவது மார்ச் மாதம் எத்தனையாவது மனித உரிமை மகாநாடு என்பதையெல்லாம் அவர்கள் கணக்கு வைத்திருக்கிறார்களா தெரியவில்லை. இன்னும் இரண்டு மாதத்துக்கு மக்களைப் பரபரப்பிலும் ஆவேச எதிர்பார்ப்புகளிலும் வைத்திருப்பதற்கான அடிமானங்களைப் போட ஆரம்பித்துவிட்டார்கள்.

"அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் அமர்வாக ஜெனீவா மகாநாடு அமையும்" என்றும் "இலங்கை அரசுக்கு எதிராக கடந்த ஆண்டை விடவும் இம்முறை ஜெனீவாவில் இறுக்கமான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படும்" என்றும் அவர்களது வழக்கமான பீலாவை எடுத்துவிடத் தொடங்கிவிட்டார்கள். எப்போதும் போலவே என்ன நெருக்கடி, என்ன இறுக்கம் என்பதையெல்லாம் இரகசியமாகவே வைத்திருந்து, அடுத்த செப்டெம்பர் மாநாட்டில் அதைவிட நெருக்கடியும் அதைவிட இறுக்கமும் உண்டாகி இலங்கை அரசு முழிபிதுங்குவதை வெறும் வசனங்களிலேயே படமாய்க் காட்டிக் கொண்டிருப்பார்கள்.

நமது மக்களின் துரதிஷ்டம், அந்த நெருக்கடி, இறுக்கம் எல்லாம் அரசை அல்ல தங்கள் கழுத்தையே மேலும் மேலும் சுற்றிக்கொண்டிருப்பதை — வாழ்வைச் சீரழிப்பதை உணராது இவர்களது பாம்பாட்டு வித்தையை சீசனுக்கு சீசன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஜெனீவாவிலும், வோஷிங்டனிலும், டெல்லியிலும்தான் நமது பிரச்சினைகளுக்கான தீர்வு விளைந்து பயிராகி என்றாவது ஒருநாள் எங்களை வந்துசேரும் என்று நயவஞ்சக ஏமாற்றாக நம்பவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எங்கள் கஷ்டங்கள் தீர வேண்டுமென்றால், சுதந்திரமாக நாம் உலவ, விரும்பிய தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ள, கல்வி கற்க, மற்றைய சமூகங்களோடு நாமும் சமமானவர்கள் என்றுணர, அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று எண்ணுகிறோம். அதற்குரிய தீர்வொன்று வந்துவிட வேண்டும் என்று காத்திருக்கிறோம்.

ஆனால் இவர்கள் என்ன சொல்கிறார்கள். "பேச்சு சரிவராது, அரசு தீர்வைத் தராது, வெளியார் வந்து மிரட்டாமல் பேசி எந்தப் பயனும் விளையாது..." என்பதையேதான் விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வெளியூரார் எப்படி, எப்போது, என்ன கொண்டுவருவார்கள் என்பதொன்றும் இவர்களுக்கும் தெரியாது; அந்த வெளியாருக்கும் தெரியாது; மக்களுக்கும் தெரியாது. மார்ச்சுக்கும் செப்டெம்பருக்கும் "நல்ல காலம் பிறக்குது நல்ல காலம் பிறக்குது" என்று குடுகுடுப்பை அடித்துவிட்டு ஓய்ந்துவிடுவார்கள்.

இங்கே தங்களால் எதுவும் ஆகாது வெளியார் மனமிரங்கினால்தான் உண்டு என்பதைச் சொல்லிப் புலம்புவதையே அரசியலாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு, இவர்களுக்கு தீவிரவாத தேசியப் பேச்சும், இனவாத உசுப்புகைகளும், மக்களை ஆவேசநிலையில் வைத்திருக்க உணர்ச்சிகர முழக்கங்களும் போதுமாக இருக்கிறது.

தீர்வு காண்பதற்கு நம்பிக்கை கொள்ளாது, அதற்கான எந்த முயற்சிகளிலும் இறங்க நம்பிக்கையில்லாது, தமிழனா கொக்கா என்ற வீரவசன நினைவுகளுடனேயே மக்களை உசுப்பேத்தி உசுப்பேத்தி எப்படி மேலும் மேலும் கீழிறக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை, சிந்திக்கும் தமிழ்த்தரப்பினர் அனைத்து மக்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இதற்கு மேலும் மௌனம் சாதித்து நம் சமூகத்தை இன்னுமின்னும் கீழ் படிகளுக்குக் கொண்டுசெல்ல, விவரமறிந்தவர்கள் துணைபோய்விடக் கூடாது. யதார்த்தம் என்ன என்பது மக்களுக்கு அறியத்தரப்பட வேண்டும்.

இந்த நாட்டுக்குள் நாம் யார்யாருடன் சேர்ந்து வாழப் போகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்கள் எல்லோருடனுமான உரையாடல்கள் திறக்கப்பட வேண்டும். - ஆசிரியர்

# இலங்கையில் இலஞ்ச ஊழல் கல்வித்துறையிலேயே அதிகம்

(கொழும்பு)

இலங்கையில் இலஞ்சம் பெறுவது தொடர்பில் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 2012ஆம் ஆண்டில் இலஞ்ச ஊழல் தொடர்பாக 3163 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மி ஜயவிக்ரம தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012ஆம் ஆண்டில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் அதிகம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற இலஞ்ச, ஊழல் முறைப்பாடுகளில் 440 முறைப்பாடுகள் கல்வித்துறை தொடர்பாகவும், 318 முறைப்பாடுகள் பொலிஸ் துறை தொடர்பாகவும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 2012 ஆம் ஆண்டு இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட 147 தேடுதல் நடவடிக்கையின் போது 77 தேடுதல்கள் வெற்றியளித்துள்ளன. 95 பேர் கைது செய்யப்பட்டதுடன், இருபது பேர் பொலிஸார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முறுகல் நிலையை அடுத்து மாணவர் பதிவு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை சட்டக் கல்லூரியின் 2013ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் பதிவு ஒரு வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக சட்டக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டுக்கான மாணவர் பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று நடைபெறவிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சட்டக் கல்லூரிப் பரீட்சையில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாகவே இந்த ஒத்தி வைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டக்கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது சட்டவிரோதமானது எனக்கோரி இலங்கை சட்டக்கல்லூரிக்கு முன்பாக மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்ரேலியாவில் இருந்து கறவை மாடுகள் இறக்குமதி

இலங்கையின் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் அவுஸ்ரேலியாவிலிருந்து 1500 கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த கறவை மாடுகள் நாளை கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ்வமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் பால் உற்பத்தியை தன்னிறைவு அடையச் செய்யும் நோக்கில் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு அண்மைக் காலம் தொட்டு பல அபிவிருத்தி செயறபாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் பிரதான நோக்கம் நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து மக்களுக்கான பால் உற்பத்திகளை மிகவும் குறைந்த விலைக்கு வழங்குவதுடன் மக்களை பால் உற்பத்தி பாவனையை அதிகரிக்க செய்து சிறந்த ஊட்டச் சத்தை பெற்றுக்கொடுப்பதாகும்.

அதற்கு உள்நாட்டு பால் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்ய வேண்டும். சிறந்த கறவை பசுக்களும் தேவை. புதிய தொழில்நுட்பங்களும் பயன்படுத்த வேண்டும் இதனை நிவர்த்தி செய்யும் காரணமாக பால் உற்பத்தி அபிவிருத்தி பாதையில் சுமார் 1500 ஜேர்சி மற்றும் பிரீசியன் இன கறவை மாடுகள் கால நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் நடவடிக்கையின் பேரில் அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

# மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு சரி என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு சரியானதே என சிரேஷ்ட சட்டத்தரணியும், ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினருமான சிறிநாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை இரத்துச் செய்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது.

அதிகாரமற்ற குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது.

நல்லாட்சி குறித்து பேசும் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நீதவான் ஒருவர் குற்றமிழைத்திருந்தால் அது தொடர்பில் சுயாதீனமான ஆணைக்குழு ஒன்றை நிறுவி அதன் மூலம் விசாரணை நடத்த வேண்டுமென சிறிநாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

# இனந்தெரியாத துப்பாக்கிதாரி சுதந்திரமாக திரிகின்றார்

## சுதந்திர ஊடக அமைப்பு

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவை படுகொலை செய்த இனந்தெரியாத துப்பாக்கிதாரி இன்னமும் சுதந்திரமாக சுற்றித் திரிவதாக சுதந்திர ஊடக அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. அமரர் லசந்த படுகொலை செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் இன்றுடன் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அத்திட்டிய பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் லசந்த உயிரிழந்தார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத அரசியல் காலாச்சாரம் நாட்டில் நீடித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது. ஊடக அடக்முறைக் கலாசாரம் தொடர்ந்து நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளது. அரசாங்க அணுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான குற்றச் செயல்களினால் குற்றவாளிகள் சுதந்திரமாக சுற்றித் திரிவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் இரண்டு சிரேஷ்ட சட்டத்தரணிகளை அச்சுறுத்திய அதேவேளை, களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவலவை சுட்டுக் கொலை செய்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

# அவசர இடமாற்றத்தால் ஆசிரியர்கள் மத்தியில் பதற்றம்

அவசர அவசரமான ஆசிரியர் இடமாற்றத்தை கைவிட்டு ஆசிரியர் இடமாற்ற சபையை கூட்டுமாறு கல்வி தொழிற்சங்கவியலாளர்களின் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. நிறுவன சட்ட தொகுப்பை மீறி தன்னிச்சையான ஆசியர் இடமாற்றம் இடம்பெற்று வருவதாக அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் ஆசிரியர்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கு ஏதாவது தீர்வு வழங்காவிட்டால் எதிர்காலத்தில் அது விருத்தியடைக் கூடும் எனவும் அச்சங்கம் கோரியுள்ளது. தற்போதைய நிலையில் அவசர ஆசிரியர் இடமாற்றத்தைக் கைவிட்டு முறையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளிடம் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.



**இதைப் புலிகள் முன்னொரு காலத்திலும் எதிர்நோக்கியதில்லை என்பதால் அவர்கள் முழுமையாகக் குழப்பமடையத் தொடங்கினர். எப்போதும் அவர்களிடமிருந்த மாற்றுவழி யுத்தம் தான். அவர்கள் இறுதி யுத்தத்திற்குத் தயாரான போது போதிய படைப்பலத்தைக் கொண்டிருக்காமையால் மக்களைக் கட்டாயப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடுத்துவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது. இவ்வாறு மக்களை யுத்தத்திலீடுபடுத்திய போது அது வெற்றி அளிக்கத் தவறியதோடு மக்கள் புலிகளுக்கு எதிரானவர்களாக மாறினர்.**

**ராகவன் நேர்காணலிலிருந்து**

# மக்கள் புலிகளுக்கு எதிரானவர்களாக மாறினர்...

**கே: விடுதலைப்புலிகளின் தோல்வியை - அழிவை எப்படிப்பார்க்கிறீர்கள்?**

ப: அநேகர் பதிலளித்து ஓய்ந்து விட்ட கேள்வியிது. இருப்பினும் சில விடயங்களைக் குறிப்பிட்டாக வேண்டும். 2001 காலப்பகுதியில் தேவதாசன் யாழ்ப்பாணத்தில் சலன சித்திரம் என்ற அமைப்பை ஆரம்பித்தார். ஈழத்தின் திரைக்கலை தொடர்பில் அக்கறை கொண்டிருந்த ஓர் இயக்கமாக அது எனக்குத் தோன்றியதால் நானும் அதில் இணைந்து கொண்டேன். காலப்போக்கில் அந்த அமைப்பினால் எதையும் ஆக்கபூர்வமாக முன்னெடுக்க முடியாதென்பதையும் தேவதாசன் மூளைச்சலவை செய்து கருத்துத்திணிப்புச் செய்வதில் விண்ணர் என்பதையும் உணர்ந்துகொண்டேன். 2002 காலப்பகுதியில் புலிகளின் தலைவர் பிரபாகரன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அன்றைய தினம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் தேவதாசன் ஒரு கூட்டத்தை நடாத்தினார். அவர் உரையாற்றும் போது இன்றோடு பிரபாகரனின் கதை முடிந்துவிட்டது.

இரு தசாப்தத்திற்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வந்த விடுதலைப்போராட்டம் மோசமான பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. இப்போது பிரபாகரன் ஒரு பொறிக்குள் அகப்பட்ட எலி. அதிலிருந்து வெளியேறுவது கடினம். இந்த ஒப்பந்தம் சமாதானத்தைக் கொண்டு வந்திருப்பதான ஒரு மாயை. உண்மையில் இவ்வொப்பந்தம் முன்னொரு போதும் நாம் கண்டிராத போர் ஒன்றுக்கான முன்னேற்பாடு என்பதை நாம் ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். ரணில் விக்கிரமசிங்க பேரினவாதிகளுக்குக் கிடைத்த ஒரு சிறந்த இராஜதந்திரி. இன்னுமொரு 10 வருடங்களுக்குள் புலிகள் இயக்கம் வேரோடு அழிக்கப்படுவதற்கான ஒரு திட்ட முன்வரைபு தான் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றெல்லாம் எடுத்துக் கூறினார். அப்போது அவர் அதை பரபரப்புக்காகக் கூறுகிறார் என நினைத்தேன். ஆனால் அவர் சொன்னதெல்லாம் நடந்து முடிந்து விட்டது.

தம்மீதான விமர்சனத்தைத் தேசத்துரோகமென முத்திரை குத்தி மாற்றுக் குரல்களை செவிமடுக்கத் தவறியதுதான் புலிகளின் அழிவுக்கு முக்கிய் காரணம். இதுதவிர புலிகளின் சமர்வெற்றிகளுக்கெல்லாம் மிதமிஞ்சிய முக்கியத்துவமளித்து நமது ஊடகங்களெல்லாம் கொம்பு சீவி விட்டதும் இன்னொரு முக்கிய காரணம். இவற்றைவிட புலிகளின் தலைவர் எம்.ஜி.ஆரின் இரசிகராக இருந்தார். தன்னையொரு தமிழ்சினிமாக் கதாநாயகன் போல் எண்ணினார். பஞ்ச் வசனங்கள் பேசினார். பொங்கிடும் கடற்கரையோரத்திலே... போன்ற தன் மீதான வாழ்த்துப் பாடல்களில் பெருவிருப்புக் கொண்டிருந்தார். 1996 காலப்பகுதியில் நான் பார்த்த ஒளி வீச்சு வீடியோ சஞ்சிகையில்... பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே... பாடலுக்கு விஜயகாந்த் பாணியில் நடிக்கவும் செய்தார். யதார்த்தமற்ற ஓர் உலகத்தை கட்டமைத்து இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை விடுதலைப்புலிகள் வீழ்வதுமில்லை... புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம், வித்துடல் விதைப்பு, மாவீரர் துயிலுமில்லம் என்றெல்லாம் வெறும் அலங்கார வார்த்தைகளால் ஈழ விடுதலைப் போராட்டத்தை அர்த்தமிழக்க வைத்தார். யதார்த்த நிலைக்கு விரோதியாக் எப்போதுமே இருந்தார். இவர் போரில் கொண்டிருந்த முனைப்பை இராஜதந்திரத்தில் காட்டத் தவறிவிட்டார். இதை நன்கு புரிந்து கொண்ட சிங்கள அரசானது இப்போர் முனைப்பைத் தணித்து விடும் நடவடிக்கையிலே இறங்கியது.



'நிகரி' இதழ் வெளிவந்து கொண்டிருந்த போது தமிழினத்திற்கு எச்சரிக்கை விடுப்பதைப் போல் அவ்விதழில் ஒரு கட்டுரை வெளியானது பலஸ்தீனத்தில் நோர்வேயின் தலையீட்டினால் என்ன நிகழ்ந்ததென்பதுவும் இலங்கையில் நோர்வேயின் தலையீட்டினால் என்ன நிகழப்போகின்றதென்பதும் அக்கட்டுரையில் விரிவாக அலசப் பட்டிருந்தது. இதை எத்தனை பேர் நம்மிடையே சீர்தூக்கிப் பார்த்தார்கள் என்பதும் கேள்விக்குரியது. புலிகளின் போர் முனைப்பைக் குலைப்பதற்கான ஒவ்வொரு நடவடிக்கைய்யயும் அரசானது நன்கு திட்டமிட்ட வகையில் மேற்கொண்டது. இதனொரு முக்கிய அங்கம்தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட சமாதான காலம். இச்சமாதான காலத்தில் அரசானது இரு முக்கிய இலக்குகளை நிர்ணயித்து முழுமையாக வெற்றியடைந்தது.

1. எதிர்காலத்தில் யுத்தம் ஏற்பட வாய்ப்பேதுமில்லை என்ற மாயையைத் தோற்றுவித்து புலிகள் இயக்க உறுப்பினர்களை குடும்ப வாழ்க்கைக்கு கொண்டு வந்தது.

2. கருணாவைப் பிரித்தாளும் தந்திரோபாயத்தின் மூலம் புலிகள் இயக்கத்தினுள்ளேயே வலுவான உளவாளிகளைத் தோற்றுவித்து இயங்கச்செய்தது. இவற்றின் மூலமாகக் குடும்ப் வாழ்வில் ஈடுபட்ட புலிகளால் யுத்தத்திற்குள் முனைப்புடன் போராட இயலவில்லை.

இறுதிக்கட்டப் போரின் போக்கைத் தலைகீழாக மாற்றக் கூடிய தாக்குதல் நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு புலிகளின் உயர் மட்டத் தளபதிகள் ஆனந்தபுரத்தில் ஒன்றுகூடித் திட்டமொன்றை வகுப்பதற்குத் தயாராகிய நிலையில் அரசு ஏற்படுத்திய உளவு வலைப்பின்னல் மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆனந்தபுரத்தில் மேற்கொண்ட ரசாயன ஆயுதத் தாக்குதல் மூலம் அங்கு ஒன்றுகூடியிருந்த அனைவரையுமே கொன்று குவிக்க முடிந்தது.

சமாதான காலத்தில் வன்னியில் நடைபெற்ற பிரபாகரனுடனான பத்திரிகையாளர் சந்திப்பிற்குச் சென்றிருந்தவர்கள் மிகத் தீவிரமாகப் புலிகளால் உடற்சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களின் அனுமதியின்றிக் காற்றுக்கூட உள்நுழைய முடியாதிருந்தது. ஆனால் அரசாங்கமானது தனது பிரித்தாளும் தந்திரோபாயத்தால் இந்நிலைப் பாட்டைத் தலைகீழாக மாற்றியமைத்தது. ஓர் அசம்பாவிதம் நிகழ்ந்தால் எதிர்காலத்தில் அதுபோல நேராமலிருப்பதற்கு வலுவான மாற்று வழிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பது தந்திரோபாயத் திட்டமிடலில் ஒரு முக்கியமான அம்சம். ஆனால் புலிகளிடமிருந்தோ 'போர்' என்ற ஒரேயொரு மாற்று வழிதான். அதுகூட காலப்போக்கில் மிகப் பலவீனமான மாற்று வழியாகி விட்டது. இதுவே புலிகள் இயக்கத்தைத் தோல்விக்கு இட்டுச் சென்றது.

**கே: போருக்கு மக்கள் பலியிடப்பட்டது மற்றும் பணயக்கைதிகளாகப் பயன்படுத்தியமை பற்றி உங்கள் கருத்துநிலை என்ன?**

ப: புலிகள் இயக்கம் தலையெடுக்க ஆரம்பித்த காலத்திலிருந்தே மக்களைக் கவசமாகப் பயன் படுத்தும் மிக மோசமான தந்திரோபாயத்தைப் பிரயோகித்து வந்துள்ளனர். மக்களின் நடமாட்ட மற்ற பிரதேசங்களில் அவர்கள் தாக்குதல் நடத்திய சம்பவங்கள் மிகக் குறைவான்வை. மக்களிலிருந்து அந்நியப்பட்டுத்தான் புலிகள் இயக்கம் செயற்பட்டு வந்துள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்தியிருந்தால் எப்போதோ நாம் எமதுரிமையை வென்றெடுத்திருக்க முடியும். ஆனால் புலிகள் இதை ஒருபோதும் விரும்பவில்லை. போரில் மக்களைக் கைதிகளாக்கிப் பலியிடுவதன் மூலம் தமதிருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய சாதகமான சூழல் 2005 நவம்பர் மாதம் வரைக்குமிருந்தது. அதாவது சர்வதேச அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க அஞ்சியவர்களே பெரும்பாலும் ஆட்சிப்பீடத்திலிருந்தனர்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# குற்றப் பிரேரணை குறித்து எவரும் விமர்சிக்க முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)
பிரதம நீதியரசருக்கு எதிராக மேற் கொள்ளப்படும் குற்றப் பிரேரணையை சர்வதேச சமூகத்தினால் விமர்சிக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

அனைத்து மத சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை முன்னெடுப்பதால், அனைத்துலக அளவில் ஏற்படக் கூடிய விளைவுகள் தொடர்பாக அனைத்து மதத் தலைவர்களும் ஜனாதிபதியிடம் கவலை தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி,

அரசியலமைப்புக்கு அமையவே பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டன.

எனவே, அனைத்துலக சமூகம் இந்த விவகாரத்தில் எம்மைக் குற்றம் காண முடியாது.

இந்தக் குற்றப் பிரேரணை அரசியலமைப்பு நடைமுறைகளுக்கு அமைவாக இடம்பெறுகின்றதா என்பதை ஆராய்ந்து ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிக்கவுள்ளேன்.

அரசியலமைப்பு சபையில் பணியாற்றிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் முன்னாள் செயலர், முன்னாள் வங்கி அதிகாரி, குடியியல் சமூக தலைவர் ஆகியோர் இதில் இடம்பெறுவர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# தாய் - மகள் நீருக்குள் பலி



(பதுளை)
பதுளை - வெலிகேமுல்ல பிரதேசத்தில் நீராடச் சென்ற இரு பெண்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் மகள் ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, குடுலுஓயா பகுதியில் நீரில் மூழ்கி பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

# பொதுமக்களின் பார்வைக்கு வாக்காளர் இடாப்பு பிரதிகள்

(யாழ்ப்பாணம்)
2012 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு பிரதிகள் ஒவ்வொரு பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாக்காளர் இடாப்பு பிரதியில் பெயர்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகளில் தவறுகள் காணப்பட்டால், வாக்காளர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கிராம சேவையாளர் அலுவலகத்தின் ஊடாக விண்ணப்ப படிவங்களை யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

விண்ணப்பங்களை உரிய காலத்திற்குள் அனுப்பி வைக்கத் தவறும் வாக்காளர்களின் பெயர்ப் பட்டியலில் திருத்தங்கள் செய்ய கால தாமதம் ஏற்படுமென்றும் இதனை தவிர்க்கும் முகமாகவும், அந்தந்த வாக்காளர் பெயர்ப் பட்டியல் அடுத்த வருடம் மே மாதத்தில் அத்தாட்சிப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் தற்போது அந்த வருட டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# ஒரு கோடி பெறுமதியான நகை பொகவந்தலாவையில் கொள்ளை

(ஹட்டன்)
ஹட்டன் - பொகவந்தலாவை நகரில் தங்க ஆபரண கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாரிய நகை கொள்ளை இடம்பெற்றுள்ளதால் பொகவந்தலாவை நகரில் ஒருவகை பதற்றம் நிலவுகிறது.

பொகவந்தலாவை நகரில் மதுபானசாலை உடைக்கப்பட்டு திருட்டுச் சம்பவம் இடம்பெற்று மூன்று நாட்கள் கடந்துள்ள நிலையில், நேற்று அதிகாலை நகரில் நான்கு கடைகள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதில் குறிப்பாக தங்க நகை கடை உடைக்கப்பட்டு ஒரு கோடி ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த திருட்டுச் சம்பவம் குறித்து பொகவந்தலாவை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# சுயாதீன ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)
பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் ஆராய்வதற்கு சுயாதீன ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இந்த சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்யும் நோக்கில் இந்த சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நான்கு பேர் அடங்கிய இந்தக் குழுவினர் பணிகளை ஆரம்பித்துள்ளதாக மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

# ஹசித மடவல கொலையின் பிரதான சந்தேகநபர் கைது

(கொழும்பு)
களனி பிரதேச சபையின் உறுப்பினர் ஹசித மடவலவின் கொலை தொடர்பான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டைவிட்டு வெளியேற முயற்சித்த போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி இக்கொலையுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் 9 மில்லிமீற்றர் வர்க்க துப்பாக்கி, 2 தோட்டாக்கள், முகம் மறைக்கும் தலைக்கவசம் இரண்டு, T81 தானியக்க துப்பாக்கி, மகசின் 2, ரவைகள 48 மற்றும் முச்சக்கர வண்டி என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட அனைவரும் களனி மற்றும் பேலியகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

குற்றத்தடுப்புப் பிரிவினர் இவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

களனி பிரதேச சபையின் உறுப் பினர் ஹசித மடவல கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிவப்பு, மஞ்சள் மழைபோய் அனுராதபுரத்தில் நீலமழை

(கொழும்பு)
அனுராதபுரம் சாலியபுர உட்பட சில பிரதேசங்களில் நீல நிறத்தில் மழை பெய்தமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்களில் மழை பெய்த சம்பவங்கள் பதிவாகின. இதே வேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாத்தளை, அம்பாறை உட்பட சில பிரதேசங்களில் பச்சை நிறத்தில் மழை பெய்திருந்தது.

இந்நிலையில் தற்போது நீல நிறத்தில் மழை பெய்த சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாண முதலமைச்சர்களுக்கு தீர்வையற்ற வாகனங்கள்

(கொழும்பு)
மாகாண முதலமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகனங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் அனைத்து மாகாண சபைகளினதும் முதலமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

மாகாண முதலமைச்சர்களுக்கு ஐம்பது இலட்ச ரூபா விற்கும் அதிகமான வாகனமொன்றை கொள்வனவு செய்ய அனுமதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

மாகாணசபை உறுப்பினர்களுக்கு 40000 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனமொன்றை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை கடந்த 2 ஆம் திகதி மாகாண சபை செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# இத்தாலி குழுவொன்று இலங்கை வந்துள்ளது

(கொழும்பு)
இத்தாலியைச் சேர்ந்த குழுவொன்று நேற்றுமுன்தினம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு வந்துள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில், இத்தாலிய லூயி துருவல்டவின் தலைமையிலான குழு இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இநத குழுவில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் தோமஸ் பிச்மன், இத்தாலிக்கான உலக வர்த்தக அமைப்பின் தலைவர் ரூடி லல்வலி மற்றும் சுற்றுலா பாடசாலையின் இயக்குனர் பிரிஜ ரி கஜார் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியினுள் இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களில் முதலீடு செய்வது குறித்து பேச்சுவார்தை நடத்தவுள்ளனர்.

இதுதவிர, எதிர்காலத்தில் உத்தேச அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் அம்பாந்தோட்டை விருந்த பயிற்சி பாடசாலை ஒன்றை ஸ்தாபிப்பது குறித்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் அமைச்சரின் மகன் சடலமாக மீட்கப்பட்டார்

(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் மேவின் ஜே குரேயின் மகன் சுஜித் குரே சடலமாக மீட்கப்பட்டார். நேற்றுமுன்தினம் மாலை கொழும்பின் புறநகர் வாதுவையில் உள்ள வீட்டில் அவர் சடலமாக மீட்கப்பட்டார். இவர் முன்னர மேல் மாகாண சபையின் உறுப்பின ராகவும் செயற்பட்டார்.பொலிஸ் தகவலின்படி சடலம் மீட்கப்பட்டபோது வீட்டுக் குள் மின்சார ஒழுக்கு ஏற்பட்டதை அவதானிக்க முடிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலைகளில் சிங்கள வகுப்புக்கள் அமைச்சரின் நடவடிக்கையால் தீர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் சிங்கள மொழி பயிற்றுவிப்பது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிங்கள மொழி பயிற்றுவிப்பதற்காக நிர்வாக நடைமுறைகளுக்கு அப்பால் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வெளியாகி இருந்தன. இதனை அடுத்து இந்த விடயத்தை நாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக்கொண்டு சென்றோம்.

நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக் கொள்கை மற்றும் கல்வித் திட்ட நடைமுறைகளுக்கு அமையவும் தேசிய மொழிகள் ஒருங்கிணைப்பு பயில்முறை நடவடிக்கைகளுக்கு அமையவும் எத்தகைய கல்விச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினோம். இத்தகைய நடைமுறையை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பின்பற்ற வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டதை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பாக உடனடியாகவே வட



மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் கவனத்திற்கு தெரியப்படுத்தியமையைத் தொடர்ந்து மேற்படி மாவட்டங்களில் சிங்கள மொழி பயிற்றுவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட உடனடி நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

# வர்ணம் பூசும் படைவீரர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் பகுதிகளை வர்ணம் பூசி அழகுபடுத்தும் வேலைகளில் படைவீரர்களும் ஈடுபட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புதிய நான்குமாடிக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் ஜனாதிபதி ம்கிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதி அதனைத் திறந்து வைக்கவுள்ளதனை ஒட்டியே இந்த வைத்தியசாலை அழகு படுத்தும் வேலைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அத்துடன் வைத்தியசாலையின் பல பகுதிகளிலும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். வைத்தியசாலையின் புதிய மாடிக்கட்டடத்தைச் சூழவுள்ள பகுதிகளுக்கும் மதில்சுவர்களுக்கும் இவ்வாறு இராணுவத்தினரினால் வர்ணம் பூசப்பட்டு வருகின்றபோதும் அதனை ஒட்டிய பகுதிகளிலும் சுத்திகரிப்புப் பணிகளும் நடைபெற்றுவருகின்றன. (பா)

# பத்தாயிரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

புதிய கல்வியாண்டு ஆரம்பமாகியுள்ளதை முன்னிட்டு யூ.ஆர் பிறண்ட்பௌண்டேசன் நிறுவனம் கடந்த 10 நாட்களாக வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றலுக்கான உபகரணங்களை வழங்கியது.இச்செயற்பாடு நிறுவனத்தலைவர் செவ்வேள் தலைமையில் இடம்பெற்றது. இதில் புத்தூர் குருநாதர் சனசமூக நிலையம், ஊறணி தென்றல் கல்வி நிலையம், வதிரி தமிழ் மன்றம், வட்டுவத்தை சனசமூக நிலையம், வட்டு கார்த்திகேய வித்தியாலயம், சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையம், மூளாய், வட்டு சுப்பிரமணிய வித்தியாலயம், உரும்பிராய் காந்திஜி சனசமூக நிலையம், வட்டு சுஜி கல்வி நிலையம், வட்டு ஜோக்கிரபிக் கல்வி நிலையம், சின்னையா கல்வி நிலையம், கீதா கல்வி நிலையம், அபிலாஸா கல்வி நிலையம் ஆகியவை உட்பட்ட யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் 10,000 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# மாதாந்த உதவிப்பணம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்களால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது தபாலகங்களுக்கு சென்று கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (104)





## வெற்றியைத் தக்கவைப்பேன்

எந்த ஒரு வீராங்கனையை குறைத்து மதிப்பிடாமல், 100 சதவீத முழுத்திறமையை வெளிப்படுத்தினால் வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளலாம். அந்த வகை யில் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி வெற்றிக்காகப் போராடுவேன் என ரஷ்யாவின் ரென்னிஸ் கவர்ச்சிக் கன்னி மரிய ஷரபோவா தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு ராசியானதாக அமைந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. பிரெஞ் ஓபன் பட்டம், முதல் முறையாக ஒலிம்பிக்கில் பங்கேற்றது, முதல் ஒலிம்பிக் பதக்கம் என நிறைய நீண்ட நாள் கனவுகள் பூர்த்தியானது. இதில் லண்டன் ஒலிம்பிக்கில் ரஷ்ய கொடி ஏந்தி வலம் வந்தது என்றும் மறக்க முடியாது. இந்த அனுபவத்தை வர்ணிக்க வார்த்தைகள் கிடையாது. அவுஸ்ரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடரை கருத்தில் கொண்டு, சிறிய காயம் காரணமாக பிரிஸ்பேன் ஓப்பன் தொடரில் இருந்து விலகினேன். காயத்தில் இருந்து விரைவில் மீண்டு, அவுஸ்ரேலிய ஓப்பன் போட்டிக்கான பயிற்சியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளேன். திறமையான இளம் வீராங்கனைகள் நிறைய உருவாகியிருப்பது ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஒவ்வொரு போட்டியிலும் மிகுந்த கவனமுடன் விளையாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது, பெண்கள் ரென்னிஸ் போட்டியின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## சிறந்த வீரருக்கான பீபா விருது 4ஆவது தடவையும் மெஸ்சி வசம்

(ஜூரிச்)

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பீபா) கடந்தாண்டுக்கான சிறந்த வீரர் விருதினை நான்காவது முறையாக பார்சிலோனா, ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி, பெற்று, சாதனை படைத்துள்ளார். கால்பந்து அரங்கில் திறமையாக செயற்படும் வீரர்களுக்கு, பீபா சிறந்த வீரர் என்ற விருது வழங்கப்படுகிறது. இதன் படி, இதற்கான இறுதிப்பட்டியலில், பார்சிலோனா அணியின் மெஸ்சி, இவரது சக வீரர் இனியஸ்டா, ரியல் மாட்ரிட் அணி கப்டன் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோர் இடம்பெற்றனர். முடிவில், பார்சிலோனா அணியின் மெஸ்சி இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதன் மூலம், நான்காவது முறையாக இவ்விருதினை வென்று, சாதனை படைத்துள்ளார். ஏற்கனவே 2009, 10, 11ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ளார்.


இந்த விருதுக்கான வீரர்களை தேர்வு செய்ய, பயிற்சியாளர்கள், சர்வதேச கால்பந்து அணியின் கப்டன்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் வாக்களிப்பர். இதில் மெஸ்சிக்கு 41.60 , ரொனால்டோ 23.68, இனியஸ்டா 10.91 சதவீதம் கிடைத்துள்ளன.

இது குறித்து மெஸ்சி கூறுகையில், இந்த விருதை நான்காவது முறையாக பெறுவதை நினைத்து, வியப்பாக உள்ளது. இதற்காக, என் சக வீரர்கள், நண்பர்கள், என் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.




## வாய்ப்புக் கிடைத்தால் சிறப்பாக ஆடுவேன்

(புதுடில்லி)



ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். அந்தக் கனவு தற்போது நிறைவேறியுள்ளது. ஆடும் 11 பேர் அணியில் வாய்ப்புக் கிடைத்தால் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்துவேன் என புஜாரா தெரிவித்தார்.

உள்ளூரில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் நான் சிறப்பாக செயற்பட்டிருந்தேன். அத்துடன் இங்கிலாந்து சென்ற இந்திய 'ஏ' அணியில் இடம் பெற்று அதிக ஓட்டங்கள் குவித்தேன். ஒருநாள் போட்டிக்கான அணியில் விளையாட முடியும் என்று நம்பினேன். உள்ளூர் ஒரு நாள் போட்டியில் தற்போது சிறப்பாக ஆடி வருகின்றேன். அதேபோல் சர்வதேச ஒருநாள் போட்டியில் திறமையை நிரூபிக்க வேண்டும் என்பது தான் தற்போதைய எனது எண்ணமாகும். ஆடும் 11 பேர் அணியில் விளையாடும் வாய்ப்பு எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. வாய்ப்பு கிடைத்தால் சிறப்பாக விளையாட முடியும் என்கிற நம்பிக்கை இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## கோல்ப் போட்டியில் சச்சின்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற நிறைய வீரர்கள் ஓய்வுக்குப் பின் கோல்ப் போட்டியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த வரிசையில் ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற்ற சச்சின் டெண்டுல்கரும் இணைந்துள்ளார்.

குஜராத்தில் உள்ள அகமதாபாத் நகரில், 3ஆவது கென்ஸ்வில்லி சாலஞ்ச் கோல்ப் தொடர், ஜனவரி 30ஆம் திகதி முதல் பெப்ரவரி 3ஆம் திகதி வரை நடக்கிறது. இத்தொடரில் இந்திய நட்சத்திர வீரர் சச்சின், பங்கேற்க உள்ளார். கிரிக்கெட் அரங்கில் எண்ணற்ற சாதனைகள் படைத்த இவர், கோல்ப் போட்டியிலும் அசத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே, மேற்கிந்தியத்தீவின் பிரையன் லாரா, அவுஸ்ரேலியாவின் ஷேன் வோர்ன், இங்கிலாந்தின் இயன் போத்தம் ஆகியோர் கோல்ப் போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர். இதே வேளை, இலங்கை அணியின் கப்டன் மஹேல ஜெயவர்த்தனா, கோல்ப் பிறிமியர் லீக் தொடரில் ஒரு அணியை வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு நாள் அணி அறிவிப்பு கலிஸிற்கு ஓய்வு

(கேப்டவுன்)

நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டது. இதில் அனுபவ வீரர் கலிஸுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள நியூசிலாந்து அணி மூன்று ஒரு நாள்போட்டிகளில் பங்கேற்கவுள்ளது. முதல் ஒரு நாள் போட்டி, எதிர்வரும் 19ஆம் திகதி,தொடங்கவுள்ளது. இதில்,பங்கேற்கும் தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் சகலதுறை வீரர் கலிஸுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

அணி விவரம்: டிவிலியர்ஸ் (கப்டன்), அம்லா, பெஹர்தின், குயின்டன்,பிளிசர், கலின், கிளின்வெல்ட், ரியான் மெக்லார்ன், மோர்கல், ரொபின் பீற்றர்சன், பங்கிசோ, ஸ்மித், ஸ்டையின், சொட்சோபே.

## வெற்றிக்கு துணை புரிந்ததில் மகிழ்ச்சி



இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் தொடரில் சிறப்பாகப் பந்து வீசி அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன் என பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜுனைட்கான் தெரிவித்தார்.

நான் வழக்கமாக நல்ல வேகத்துடன் அவுட் ஸ்விங் பந்து வீசக்கூடியவன். இன் ஸ்விங் பந்துவீச்சை மேம்படுத்தும்படி முன்னாள் கப்டன் வாசிம்அக்ரம் எனக்கு ஆலோசனை வழங்கினார். அவரது ஆலோசனைப்படி நான் இன் ஸ்விங் செய்யும் வகையில் பந்து வீசி அதிக பயிற்சி எடுத்தேன். அது இந்திய அணியின் . விக்கெட்டுக்களை விரைவாக வீழ்த்த நல்ல ஆயுதமாக இருந்தது. அந்த கடின பயிற்சி எனக்கு பலன் அளித்தது. இதற்கு அக்ரத்திற்கு எனது விசேட நன்றிகள்.

இந்திய மண்ணில் தொடரை வெல்ல நானும் முக்கிய பங்காற்றியிருப்பதில் மகிழ்ச்சி. ஒட்டுமொத்த அணியும் சிறப்பாகச் செயற்பட்டது. கடைசிப் போட்டியில் தோல்வியைத் தழுவியது கவலையான விடயம்.

ஏனெனில் குறைந்த ஓட்ட எண்ணிக்கையை எங்களால் எட்ட முடியாமல் போனது உண்மையில் ஏமாற்றமே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றிய பாகிஸ்தான் அணிக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. இதில் ருவென்ரி-20 மற்றும் ஒரு நாள் அணித் தலைவர்களான ஹபீஸ், மிஸ்பா உல் ஹக் ஆகியோர் கிண்ணத்துடன் செல்வதைக் காணலாம்

## ரோகித்திற்கு தொடர்ந்தும் வாய்ப்பு முன்னாள் வீரர்கள் அதிருப்தி

(புதுடில்லி)

இந்திய அணியில் ரோகித் சர்மாவுக்கு தொடர்ந்து வாய்ப்பு அளிப்பது பெரும் வியப்பாக உள்ளது இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்திய அணியின் மத்திய வரிசை வீரர் ரோகித் சர்மா (வயது30). இதுவரை 86 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர், 2010இல் அடித்த இரு சதங்கள் உட்பட 1978 ஓட்டங்கள் எடுத்துள்ளார். உள்ளூர் போட்டிகளில் மட்டும் வெளுத்து வாங்குவார். தற்போது இடம்பெற்று வரும் ரஞ்சி கோப்பை தொடரில், ஐதராபாத் அணிக்கு எதிராக 112 (நவம்பர்), டிசம்பரில் பஞ்சாப்புடன் 203, சவுராஷ்டிராவுடன் 166 ஓட்டங்கள் எடுத்து இந்திய அணியில் மீண்டும் இடம் பெற்றார்.

ஆனால், சர்வதேச போட்டிகள் என்றவுடன், ரோகித் சர்மாவுக்கு நடுக்கம் வந்துவிடும். கடைசியாக விளையாடிய 9 போட்டியில் ஒரு முறை (68 ஓட்டங்கள், எதிரணி-பாகிஸ்தான்,) மட்டும் தான் இரட்டை இலக்க ஓட்டங்களை எட்டினார். மற்றபடி 0, 4, 68, 5, 0, 0, 4, 4, 4 என, ஐந்து ஓட்டங்களை தாண்டுவதே பெரிய பாடாக உள்ளது.

ஒருநாள் மட்டுமன்றி, ருவென்ரி-20 போட்டியிலும் இப்படித்தான் திணறுகிறார். கடைசியாக விளையாடிய 5 இனிங்சில், 1, 25, 24, 2, 4 ஓட்டங்கள் தான் எடுத்துள்ளார். இவரைப் போன்றவர்களை அணியில் இருந்து நீக்கி விட்டு, ருவென்ரி-20 போட்டிகளில் அசத்திய ரகானே போன்ற இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுத்து பார்க்கலாமே எனவும் தெரிவித்துள்ளனர்.

## பொறுப்பற்ற ஆட்டமே தொடரை இழக்கக் காரணம்

(சிட்னி)

இலங்கை அணி வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை இழக்க முக்கிய காரணமாக அமைந்துவிட்டது என இலங்கை அணியின் பயிற்றுநர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கை அணி வீரர்கள் எவரும் தொடர்ச்சியாக தமது ஆட்டத் திறனை வெளிப்படுத்தி வரவில்லை. சில தருணங்களில் இலங்கை அணி அவுஸ்ரேலிய அணி அளவிற்குச் சிறப்பான திறமையை வெளிப்படுத்தியிருந்ததுஆனால் அதைத் தொடர்ச்சியாக, நீண்ட அளவிற்கு வெளிப்படுத்த முடிந்திருக்கவில்லை. தோல்விக்கான காரணமாகவே அதுவே அமைந்துவிட்டது. இத்தொடரில் இலங்கை அணி தோல்வியடைந்த போதிலும், சில இளைய வீரர்கள் மிகச்சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தனர். அது தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகின்றேன். இத்தொடரில் சில இளைய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அவ்வீரர்கள் தாங்கள் சர்வதேச மட்டத்தில் பிரகாசிக்கக்கூடியவர்கள் என்பதை வெளிப்படுத்தியிருந்தார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# கஜன் சகலதுறையில் கலக்கல்

## கிண்ணம் வென்றது மட்டுவில் கண்ணகை



(சாவகச்சேரி)

கஜனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் சாவகச்சேரி பவர் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மட்டுவில் கண்ணகை அணி கைப்பற்றிக் கொண்டது.

சாவகச்சேரி பவர் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட 16 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் பல மென்பந்து கிரிக்கெட் அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் கண்ணகை அணியும், சாவகச்சேரி லிபோரிஸ் அணியும் தகுதிபெற்றது.

இவ் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மட்டுவில் கண்ணகை அணி கஜனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் 16 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜன் 40, நந்தகோபன் 20, கண்ணன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றொக்சன் ஐந்து, யூட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 123 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சாவகச்சேரி லிபோரியஸ் அணி, கோபிநாத், கஜன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப்பறிகொடுத்தது.இறுதியில் லிபோரியஸ் அணி 14.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத்தழுவியது. இதில் வினோம் 14, நிலோஜன் 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோபிநாத் நான்கு, கஜன் மூன்று, வினோதன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் மட்டுவில் கண்ணகை அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக மட்டுவில் கண்ணகை அணியைச் சேர்ந்த கஜன், தொடர் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த வினோதன் தெரிவு செய்யப்பட்டனர். (118)

# மாகாண மட்ட கரப்பந்து நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு வடமாகாண பாடசாலை அணிகளுக்கிடையில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாளை முதல் நடைபெறவுள்ள இப்போட்டிகள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெறவுள்ளது.

வடமாகாணப் பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள இக்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியானது, யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜா மகா வித்தியாலயத்திலும், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

மேற்படி இரு இடங்களில் நடைபெறும் போட்டிகளில், முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் தெரிவு செய்யப்பட்டு, 12ஆம் திகதி வவுனியாவில் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெறும்.

வடமாகாண அணிகளுக்கான போட்டியில் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் இரு அணிகளும், தேசிய ரீதியில் நடைபெறும் தேசத்தின் மகுடம் கண்காட்சிக் கரப்பந்தாட்டப் போட்டிக்கு அனுப்பப்படும் என யாழ்ப்பாணக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சண் தயாளன் தெரிவித்தார். (93)




# பிரதேச விளையாட்டு விழா

## நெடுந்தீவில் இன்று கலந்துரையாடல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பிரதேசத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகத் தலைவர் அல்லது செயலாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறும், இந்த ஆண்டில் விளையாட்டுச் செயற்பாடுகள் மேலும் ஊக்குவிக்கும் வகையில் பல தீர்மானங்கள் மேற்கொள்ளவுள்ளதாகவும் நெடுந்தீவுப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் தெரிவித்தார். (93)

# பருத்தித்துறை கால்பந்து லீக்

## நிர்வாகத் தெரிவு

(நெல்லியடி)

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் இந்த ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும், வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 6ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் செயலாளராக சி. வரதராஜன், தலைவராக மு. வேதாபரனம், உப தலைவர்களாக டாக்டர் கமலநாதன், நலநீதமணி, பொருளாளராக எம். நவநேசன், உப செயலாளராக அ. அருளானந்தசோதி மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக க. ஸ்ரீஸ்கந்தராசா, கு. வினோத், க. கதிர்காமராஜ், இ. பரமதாஸ், கே. பிரசாந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (12)

# வடமராட்சி பிரதேச மட்ட மென்பந்து கிரிக்கெட்

## நியூபவர் வசம் கிண்ணம்

(நெல்லியடி)

கரவெட்டி ஐங்கார விளையாட்டுக்கழகம் நடத்திய ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை நியூபவர் அணி கைப்பற்றிக் கொண்டது.


கரவெட்டி ஐங்கார விளையாட்டுக்கழத்தினால் பிரதேச மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் அதிகளவிலான அணிகள் பங்குபற்றின. இருப்பினும் இதன் இறுதிப் போட்டிக்கு ஞானம்ஸ் மற்றும் நியூபவர் அணிகள் தகுதிபெற்றன. இதன் இறுதிப் போட்டி கடந்த 6ஆம் திகதி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி 18.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கீதன் 26, பிரகாஸ் 21 சுகந்தன் ஒன்பது, துவகரன் ஏழு, அகிலன் நான்கு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் காந்தன், நிபந்தன் தலா மூன்று, கோபி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூபவர் அணி 19.3 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிரகாஸ் 19, வாசு 12, ராம் 15, கபிலன் 10, பகீதரன் எட்டு, காந்தன் ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அனுயந்தன் நான்கு, சுவேந்திரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக நியூபவர் அணியைச் சேர்ந்த வாசு, போட்டித் தொடர் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த பிரகாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் கனகலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் டி. டிம். வேதபாரணம், சமுர்த்தி உத்தியோகத்தர் இ. உதயகுமார், கிராம சேவகர் வே. வைத்திலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றிபெற்ற அணிக்கும், வீரர்களும் கிண்ணங்கள் வழங்கிக் கௌரவித்தனர். (12)







# பார்க் ஜெய் சாங் (PSY): கிண்டல் மனிதன்

- ம. நவீன் -

ஓர் அறிவியல் கட்டுரையில் வாசித்தேன், "நம் கண்களுக்கு இருளை ஊடுருவும் சக்தி உண்டு. ஆனால், நாம் அதை பயிற்றுவிப்பதில்லை. இருளைப் பார்த்ததும் கண்களை மூடிக்கொள்கிறோம். இதனால் கண்கள் தம் ஆற்றலை அறிவதே இல்லை" என எழுதப்பட்டிருந்தது. எனக்கென்னவோ கண்கள் மட்டுமல்ல மனித வாழ்வே அவ்வாறானதுதான் எனத்தோன்றுகிறது.

சவால்கள் இல்லாத மனித வாழ்வு முழுமை அடைவதில்லை. பாதுகாப்பான வளையத்தில் வாழும் ஒரு மனிதன் தன் ஆற்றலை கடைசிவரை அறிவதே இல்லை. போராடும் போதுதான் நம் சக்தியைப் பயன்படுத்துகிறோம். ஒரு கூட்டுப்புழுவை பிரித்து வண்ணத்துப்பூச்சியைப் பறக்க வைத்தால், காற்றின் சக்தியைத் தாங்க இறக்கைக்கு சக்தியில்லாமல் மாய்ந்துவிடும். இறக்கையின் மூலம் கூட்டை உடைக்கும் புழுவால்தான் வண்ணத்துப்பூச்சியாக சிறகை விரித்து காற்றை எதிர்க்க இயல்கிறது. செல்வந்தர்களாகப் பிறந்தவர்கள் எல்லாம் இதுவே போதும் என முடங்கி கிடப்பதில்லை. அந்தப் பாதுகாப்பு வளையத்தை விட்டு வெளிவந்து தங்கள் வாழ்வை முழுமை படுத்த போராடுபவர்கள் நிறைய பேர் உண்டு. அண்மைய உதாரணம் பார்க் ஜெய் சாங் (Park Jae-sang).

பார்க் ஜெய் சாங் பற்றி பேசும் முன் எனக்கு 'Life Of Pi' திரைப்படத்தின் காட்சிகள் நினைவுக்கு வருகின்றன. புலியுடன் பயணம் செய்யும் "பை" தான் தொடர்ந்து உயிர்வாழ புலியின் மேல் இருந்த மிரட்சியே காரணம் என்கிறான். அதன் தாக்குதலில் இருந்து தப்பிக்க ஏற்பட்ட எச்சரிக்கை உணர்வே அவனை தொடர்ந்து இயங்கவும் துடிப்புடன் இருக்கவும் வைத்தது என நம்புகிறான். வாழ்வில் இரு வகையான மனிதர்கள்தான் உள்ளனர். ஒருதரப்பினர் பாதுகாப்பு வளையத்தினுள் வாழ்பவர்கள். மற்றவர்கள் அதைவிட்டு வெளியே வந்து அல்லது அது கிடைக்காமல் சவால் மிகுந்த வாழ்வில் போராடுபவர்கள்.

இதில் முதல் தரப்பினர் நாட்டுக்கு நல்ல குடிமகனாக இருப்பார்களே தவிர சமூகத்திற்கு ஒரு பயனும் விளையப் போவதில்லை. ஏற்கனவே இருக்கும் ஒரு அமைப்பை எந்தக் கேள்வியும் இல்லாமல் செய்து நிறைவாக வாழ்வதாய் நினைத்து இறந்தும் விடுவார்கள். சவால் மிக்க வாழ்வென்றாலும் தங்களுக்குப் பிடித்த மாதிரியான ஒரு சூழலை உருவாக்கிக்கொண்டு அதன் உச்சங்களை நோக்கி பயணிப்பதையே வாழ்வின் இன்பம் நிறைந்த சவாலாக ஏற்பவர்களால்தான் புதுமைகளை உருவாக்க முடிகிறது.



PSY என்று அழைக்கப்படும் பார்க் ஜெய் சாங் (Park Jae-sang), பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர்தான். அவரது தந்தை தென்கொரியாவின் பெரிய நிறுவனமொன்றின் தலைவர். பார்க் ஜெய் சாங்கிற்கு பள்ளிக்கூடம் போகவே பிடிக்காது. வகுப்புத் தோழர்களைக் கோபப்படுத்துவார். ஆனாலும் வகுப்பில் நகைச்சுவையாகப் பேசி மற்ற மாணவர்களைச் சிரிக்க வைப்பார். இதுவே அவரை ஆசிரியர்கள் வெறுக்கக் காரணமாகவும் இருந்தது.

ஒருமுறை தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் அவரது பள்ளி ஆசிரியர் ஒருவர், "பார்க் ஜெய் சாங் நிறைய பாலியல் ஜோக்குகளைச் சொல்வார். ஒட்டு மொத்த வகுப்பையும் தமது நகைச்சுவையால் ஈர்த்து விடுவார். அப்போது அவரை நான் வெறுத்தேன். இப்போது பார்க்கும்போது, அவர் வகுப்புக்கு ஒரு பெரும் புத்துணர்ச்சியைத் தந்துள்ளது புரிகிறது" என்றார்.

15 வயதில், தொலைக்காட்சியில் பார்த்த ஒரு பொப் இசை நிகழ்ச்சி அவருக்கு இசையில் இருந்த ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. 2001இல் வெளிவந்த இவரது முதல் ஆல்பம் முறையற்ற செய்திகளைக் கொண்டிருப்பதாகச் சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

கலவையான உடை, வித்தியாசமான நடன அசைவுகள், நேரடியான பாடல் வரிகள் போன்றவற்றால் இவருக்கு "The Bizarre Singer" என்ற பட்டப் பெயரைப் பெற்றுத் தந்தது. இவரின் இரண்டாவது ஆல்பமும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது, அந்த ஆல்பம் 19 வயதுக்குக் குறைந்தவர்களுக்குத் தடை செய்யப்பட்டது.

நிறைய தடைகள், சவால்கள். அதன்பின் இவரின் ஆறாவது இசைத் தொகுப்பின் முதல் பகுதி தான் கங்னம் ஸ்டைல் பாடல்.

தென்கொரியாவின் தலைநகரமான சோலில் உள்ள கங்னம் வட்டாரத்தையொட்டி இப்பாடலுக்கு தலைப்பிடப்பட்டுள்ளது. அந்த வட்டார மக்களின் அதிதீவிரமான பயனீட்டுத்தன்மையைக் கிண்டல் செய்யும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது.

பிரபலமான கங்னம் ஸ்டைல் பாடல் கடந்த ஆண்டு (2012) ஜூலை மாதம் யூடியூப்பில் ஒளியேற்றப்பட்டது. ஒரே மாதத்தில் மிகப் பிரபலமடைந்த பாடல், இதுவரை 1 பில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்த்து, உலகில் மிக அதிகமானவர்களால் பார்க்கப்பட்ட மிகப்பிரபலமான பாடல் என்ற அந்தஸ்தைப் பெற்றது. இது PSY-யின் ஒரிஜினல் வீடியோவைப் பார்த்தவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலான கணக்கு. ஆனால் இப்பாடல் தொடர்பான வீடியோக்களையும் இப்பாடலின் மொழி பெயர்ப்பு வீடியோக்களையும் கணக்கிட்டால் அந்த எண்ணிக்கை 2.2 பில்லியனைத் தாண்டி விடும் என யூடியூப் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலாளரான பான் கீ மூன் PSY-வைச் சந்தித்த போது, "மிகப் பிரபலமான கொரிய நாட்டுக்காரர்" என்ற எனக்குள்ள பட்டத்தை இப்போது நான் துறக்க வேண்டும் என்று நகைச்சுவையாகக் கூறினார். உலக அளவில் பிரபலமடைந்துள்ள PSY-யுடன் இணைந்து செயலாற்ற விரும்புவதாக பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவிலும் உலக அளவிலும் பல விருதுகள், தலைவர்கள், பிரபலங்கள் உட்பட பலரின் பாராட்டுகளும் நட்பும் இன்று இவருக்குக் குவிகிறது.

எந்தக் கிண்டல் அவரை சகிக்க முடியாதவராக மாற்றியதோ அதுவே அவரை உலகுக்கு அடையாளம் காட்டியுள்ளது. வகுப்பின் கிண்டல் செய்யும் மாணவர்களை அடித்து மிரட்டி வைக்கும் ஆசிரியர்கள் ஒருதரம் இதுபற்றி யோசிக்கலாம்.




பேராசிரியர் கைலாசபதி சொன்ன ஒரு சம்பவம். பேராசிரியர் கைலாசபதி பல்கலைக்கழக விரிவுரையாளராக வருவதற்கு முன் தினகரன் பத்திரிகை ஆசிரியராக இருந்தவர். 1960களின் முற்பகுதி. இலங்கையில் இனமுரண்பாடு மோசமாக இருந்த ஒரு காலப் பகுதி. ஒருநாள் கைலாசபதி செய்தி சேகரிக்க இலங்கை நாடாளுமன்றம் சென்றிருந்தார். அன்று வெலிமடை நாடாளுமன்ற உறுப்பினர் கே.எம். பி.ராஜரத்னா தமிழர்களுக்கு எதிராகப் பேசினார். இலங்கை வரலாற்றில் கே.எம்.பி.ராஜரத்னா, ஆர்.ஜி.சேனநாயக்கா, சிறில் மத்தியூ போன்றவர்கள் இனத்துவேசத்தைக் கக்குவதில் காலத்துக்குக்காலம் முன்நின்றார்கள்.

## இனவெறியனுக்கு இரும்பு மனிதன் சாட்டையடி!



ராஜரத்னாவின் தந்தை ஒரு தமிழர். தாயார் ஒரு சிங்களவர். சிறந்த பேச்சாளரான ராஜரத்னா அன்று நாடாளுமன்றத்தில் தமிழருக்கு எதிராக அனல்கக்கும் பேச்சொன்றை மேற்கொண்டார். சுற்றவுள்ள எல்லாம் பத்தி எரியும் போல இருந்ததாகக் கைலாசபதி அன்றைய அவரது பேச்சைக் குறிப்பிட்டார். பேச்சில் அவ்வளவு அனல். பேச்சின் பின்பு இடைவேளையின்போது நடந்த விடயம்தான் நாம் நன்கு யோசிக்கவேண்டிய விடயம். இடைவேளையின் போது கைலாசபதியும் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் தலைவர்களில் ஒருவருமான நாகநாதனும் நாடாளுமன்ற கன்ரீனுக்குப் போனார்கள். அப்போது குறுக்கே ராஜரத்னா வந்தார். ராஜரத்னா நாகநாதனின் வயிற்றில் இடிக்கிறமாதிரி கையைக் கொண்டுவந்தார். இப்போது நாகநாதன் ராஜரத்னாவின் தோளில் கையைப்போட்டார். அப்படியே சிரிச்சுக் கதைத் துக்கொண்டு நாகநாதனும் ராஜரத்னாவும் கன்ரீனுக்குப் போனார்கள்.

அடுத்த "சுதந்திரன்" பத்திரிகையில் எப்படி செய்தி வந்திருக்கும்? "இனவெறியனுக்கு இரும்பு மனிதன் சாட்டையடி!" நாங்களும் உண்மையறியாது இதை வாசிச்சுப் போட்டு "என்னென்றாலும் இரும்பு மனிசன் இரும்பு மனிசன்தான்" என்று சந்தோசப்பட்டிருப்பம்.

1965ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் யூ.என்.பி யுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைத்தபோது ஏழுகட்சியில் ஒருகட்சி ராஜரத்னாவின் கட்சி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தனிப்பட்ட முறையில் சல்லாபம். மேடையில் சண்டமாருதம். இதுதான் அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்த்தலைவர்கள் செய்கின்ற ஏமாற்று விளையாட்டு.

- ருத்ர தாண்டவன்

# விண்வெளிச் சுற்றுலா

சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஆய்வாளர்கள், விண்வெளிக்கு சென்று வர, சுவீடன் நாடு திட்டமிட்டு வருகிறது. இதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு நடந்து வருகிறது. ஐரோப்பா கண்டத்திலுள்ள சுவீடன் நாட்டில், கிரூனா என்ற பகுதியில், விண்வெளிப் பயணத்திற்கான ஆலோசனைகள் துவங்கியுள்ளன. இப்பகுதி, சுவீடன் நாட்டின், ஆர்டிக் பகுதியை ஒட்டி, நோர்வே நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள குளிர் பிரதேசம். தலைநகர் ஸ்ரொக்ஹோமில் இருந்து 953 கி.மீ. தொலைவில் உள்ள இந்த குட்டி நகரம், நள்ளிரவில் சூரியன் தெரிவது, பனிக்கட்டிகளாலான தங்கும் விடுதி, மனிதனை நாய்கள் இழுத்துச் செல்லும் வாகனங்கள் என, சுற்றுலாப் பயணிகளின் மனதை, அதிகளவில் கொள்ளை கொள்ளும் பகுதியாக இருந்து வருகிறது.



இங்கு, 1957இல், துவங்கப்பட்ட சுவிடிஷ் இன்ஸ்டிடியூட் ஒப் ஸ்பேஸ் பிசிக்ஸ் (ஐ.ஆர்.எப்.) என்ற ஆய்வு நிறுவனம் தான், விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளது. விண்வெளிப் பயணத்திற்காக, கிரூனா விமான நிலையம் பயன்படுத்தப்பட உள்ளது. இப்போது, இங்கிருந்து தினமும், லண்டன் மற்றும் டோக்கியோவுக்கு விமானப் பயணங்கள் நடைபெற்று வருகிறது.

இங்கிருந்தே, விண்வெளிக்கு விமானங்கள் மூலம், பயணிகளை அழைத்துச் சென்று வர ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. வெறும் இரண்டு மணிநேரத்தில் சென்று வர முடியும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

விண்வெளியில் அவர்கள் தங்களது எடை குறைந்து காணப்படுவது, அங்கிருந்து பூமியின் தோற்றம் போன்ற பல்வேறு வகையான அனுபவங்களை இதில் பயணம் செய்பவர்கள் பெற இயலும். ஒரு முறை பயணத்தில் ஒன்று முதல், ஆறு பயணிகள் மட்டுமே இடம் பெற முடியும்.

பூமியில் இருந்து, 100 கி.மீ., அப்பால் சென்று, அங்கு பயணிகள் ஐந்து நிமிடங்கள் ஆய்வு செய்ய அனுமதிக்கப்படுவர். விண்வெளி பயணத்திற்கான, சிறந்த இடமாக, கிரூனா உள்ளது என்பது தான் சிறப்பம்சம். இந்தத் திட்டத்திற்குப் பயன்படும் விமானங்களை, அமெரிக்காவில் உள்ள பல்வேறு தனியார் நிறுவனங்கள் தயாரித்துத் தர உள்ளன. இந்த திட்டத்தில், பத்தாண்டுகளில், 14 ஆயிரம் பயணிகள் பயணிப்பர் என ஆய்வுகள் மூலம் கணித்துள்ளனர்.

பல்வேறு வசதிகளை உள்ளடக்கிய நாடாக, சுவீடன் திகழ்ந்த போதும், அங்கு விண்வெளி பயணத்திற்கான விமானங்கள் தயாரிக்காமல், வெளிநாடுகளில் இருந்து அவற்றை வாங்க முடிவு செய்துள்ளது. இந்த திட்டத்தை விரைவாக தொடங்கி விட, சுவீடன் முனைப்பு காட்டி வருகிறது. விரைவில் விண்வெளிக்கு சாதாரண பயணிகளும் சென்றுவரப் போகின்றனர்.



கிட்டப்பாவும் சுந்தராம்பாளும்

# கிட்டப்பாவின் பாட்டு!

சென்னையில் நடந்த கந்தர்வ கான எஸ். ஜி. கிட்டப்பாவின் 25ஆவது நினைவு நாளுக்கு தலைமை தாங்கிய கர்நாடக சங்கீத மேதை அரியக்குடி ராமானுஜய்யங்கார் தன் தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

"நான் நாடகங்களுக்கோ சினிமாக்களுக்கோ போவதில்லை. ஆயினும் கிட்டப்பா உயிருடன் இருந்தபோது அவருடைய நாடகங்கள் நடந்தால் தேடிப் போவதுண்டு. நான் கச்சேரி செய்யப் போகிற இடங்களில் கிட்டப்பா நாடகம் நடந்தால் அதற்கும் போகத் தவறுவதில்லை. கிட்டப்பாவின் நாடக மேடை சங்கீத வித்வான்களால் அலங்கரிக்கப்பட்ட அரங்கமாக இருந்தது.

தெய்வத்தின் அருளால் நம் நாட்டுக்குக் கிடைத்தவர் கிட்டப்பா. சாஸ்திரீயமாக அவர் சங்கீதத்தைப் பாடிக் கொண்டிருந்தார் என்பது அந்தக்காலத்தில் எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது.


அவர் நாடகங்களுக்கு நான் மட்டும் ரசிகன் இல்லை. அக்காலத்தில் மகாவித்வான்களான கோவிந்தசாமிப் பிள்ளை, நயினாப் பிள்ளை, ராஜரத்தினம் பிள்ளை, முத்தையா பாகவதர், மகாராஜபுரம் விசுவநாதய்யர் எல்லோருமே கிட்டப்பாவின் நாடகத்திற்குச் சென்று வருவோம்.

எதற்காகப் போனோம்?

கிட்டப்பாவின் அருமையான சாரீரத்திலே நமது கர்நாடக ராகங்கள் ஜொலிக்கின்ற அழகைக் காது குளிரக் கேட்பதற்காகவே! சங்கராபரணம், பைரவி, காம்போஜி முதலிய கர்நாடக ராகங்களை கிட்டப்பா பாடியபோது கர்நாடக சுத்தம் தவறவே தவறாது. அந்தக் காலத்தில் மைக் கிடையாது. ஆயிரக்கணக்கில் அன்றாடம் அவர் நாடகத்திற்குக் கூட்டம் வரும். அத்தனை ஜனங்களின் காதுகளிலும் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் வண்ணம் நாலரைக் கட்டை சுருதியில் அந்தப் பாலகன் பாடிய அழகை நான் எப்படி வர்ணிப்பது?"

('சங்கீத மணம் கமழும் கதம்பமாலை' என்ற புத்தகத்திலிருந்து)

# அத்திப்பழ மகிமை



- அத்திப்பழம் இந்த உலகம் தொடங்கிய நாள் முதல் உள்ளது. இது குறித்து பைபிளிலும் [illegible]ப்பட்டிருக்கிறது.
- கிரேக்கம், இத்தாலி, தெற்கு ஐரோப்பிய நாடுகள், அல்ஜீரியா, மத்திய தரைக்கடல் நாடுகளில்தான் அத்திப்பழம் அதிக அளவில் விளைகிறது.
- நன்கு பழுத்த அத்திப்பழத்தில் மிகுந்த சத்துகள் உள்ளன.
- இது உணவை விரைவில் சமிபாடடைய வைத்து, சுறுசுறுப்பைத் தரும்.
- சாப்பாட்டுக்குப் பின்னர் அத்திப்பழம் சாப்பிட்டால் மலச்சிக்கல் தீரும்.
- சீமை அத்திப்பழம் சாப்பிட்டால் வெண்குஷ்டம், தோலின் நிறமாற்றம் குணமாகும்.
- அத்திப்பழத்தை தேனிலும், கற்கண்டுத் தூளிலும் சேர்த்து உண்ணலாம்.
- அத்திப்பழச்சாறு கல்லீரல், குடல்களின் இயக்கத்தை மேம்படுத்துகிறது. உடல் தளர்ச்சியையும் போக்குகிறது.
- அத்திப்பழத்தை இரவில் தண்ணீரில் ஊற வைத்து, காலை எழுந்தவுடன் அந்தப் பழத்தைச் சாப்பிட்டு, ஊற வைத்த தண்ணீரைப் பருகி வந்தால் எத்தனை கடினமான மலமும் இளகி வெளியேறும்.

('மூலிகைக் குழந்தைகள்' நூலிலிருந்து)



# செயற்கைப் பால்!

நாம் இதுவரை காலம் அறிந்தவரை பால் கலப்படம் என்பது, பாலில் தண்ணீர் கலப்பது தான். ஆனால், தற்போது, இந்தியாவில் சில இடங்களில் நடக்கும் பால் கலப்படம், உயிரையே பறித்து விடும் ஆபத்து கொண்டது எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம் ஆகிய இந்திய வட மாநிலங்களில் இந்த கொடுமை அதிக அளவில் நடந்து வருகிறதாகவும் கூறப்படுகிறது.

"சிந்தெடிக்" பால் - செயற்கைப் பால் என அழைக்கப்படும் இந்த பாலில் கலக்கப்படும் பொருட்கள் என்ன தெரியுமா?

- ✦ காஸ்டிக் சோடா.
- ✦ தண்ணீர்.
- ✦ எண்ணெய்.
- ✦ உப்பு.
- ✦ சீனி.
- ✦ யூரியா.

இவ்வகையாகத் தயாரிக்கப்பட்ட பாலை, உண்மையான பாலுடன் கலந்து விட்டால், இத்துறையின் நிபுணர்களால் கூட வித்தியாசம் காண முடியாதாம்!

அந்த மாநிலங்களில் குறிப்பிட்ட ஒரு, சவர்க்காரப் பவுடருக்கு எக்கச்சக்க "டிமாண்ட்" இருப்பதைக் கண்டிருக்கிறார்கள். இந்த கிராக்கிக்கு என்ன காரணம் என்பதை ஆராயும் போது தான் உண்மை புலப்பட்டுள்ளது. இந்த சலவைத்தூளில் தண்ணீர் கலந்தால், அதில் இருந்து வரும் வாசனை, பால் வாசனை போலவே இருந்ததாம். இந்த சவர்க்காரத் தண்ணீரை, பாலுடன் கலந்து விற்பனை செய்து விடுகின்றனராம்!

பாலில் இருந்து வெண்ணெயைப் பிரித்தெடுத்து விட்டு, கொழுப்பு இருப்பது போல காட்ட, மரக்கறி எண்ணெயைக் கலந்து விடுகின்றனராம்!

இந்த கலப்படம் எளிதில் வெளியே தெரியாமல் இருக்க, "ஹோமோஜினைஸ்" என்ற தொழில் நுணுக்கத்தைப் பயன்படுத்தி, மரக்கறி எண்ணெயை "குளோப்யூல்ஸ்" - சிறு, சிறு துளிகளாக மாற்றி விடுகின்றனராம்!

நம்மூரில் தண்ணீரை மட்டும் கலக்கிற பால்காரர்கள் எவ்வளவோ பரவாயில்லை என்கிறீர்களா?

# தமிழக சினிமாவில் முஸ்லிம் கதாபாத்திரங்கள்

- எஸ்.எம்.எம். பஷீர் -

முஸ்லிம்களின் தனிமனித கதாபாத்திரங்கள் அமைவதான தமிழ் திரைப்படங்களில், அப்பாத்திரங்களில் நடிக்கும் தமிழ் நடிகர்கள் தலையிலே துருக்கித் தொப்பி, கழுத்திலே தாயத்து, கட்டம் போட்ட கைலியை (சாரம்) அணிந்தவர்களாகவே காண்பிப்பது என்பது தமிழ் சினிமாவில் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பாத்திரப் புனைவுகள் கொண்ட சகல தமிழ் நாட்டு திரைப்படங்களிலும் காலங்காலமாக நடைபெற்று வருகிறது.

அதற்கு மேல் பல வேளைகளில் நான், நீ, அல்லது நாங்கள் நீங்கள் அல்லது உங்களுக்கு எனக்கு என்பதை சொல்ல முஸ்லிம்கள் "நம்பள்கி" "நிம்பள்கீ" என்றெலாம் கிண்டலாய் பேசுவதாகவும் அமைத்திருப்பதுண்டு. அப் பாத்திரம் பாடுவதாக காட்சி அமைந்தால் கைகளிலே "றப்பான்" எனப்படும் (அரபு நாடுகள் பலவற்றில் பரவலாகவும் தென்னிந்தியாவில் உள்ள மிகச் சிறுபான்மையான பக்கீர் எனப்படும் ஒரு சமூகப் பிரிவினராலும் பாடல்களில் பயன்படுத்தப்படும் வாத்தியக் கருவியான றப்பானில் அறைந்து சப்தமெழுப்பி பாடுவதாக காண்பிப்பார்கள். சிவாஜி கணேசனின் பாவ மன்னிப்பு படத்தில் இடம்பெறும், முஸ்லிம்களுக்குள் இன்றுவரை பிரபல்யமான பாடலான "எல்லோரும் கொண்டாடுவோம்" எனும் பாடலை ரி.எம்.சௌந்தரராஜனும், நாகூர் ஈ.எம்.ஹனிபாவும் சேர்ந்து பாடுவதாக காண்பிக்கும் காட்சியிலும் அப்பாடலுக்கு வாயசைத்து நடிக்கும் சிவாஜி கணேசனும் நாகூர் ஹனிபாவின் பாடலுக்கு வாயசைக்கும் நடிகரும் தாயத்து, துருக்கித் தொப்பி, றப்பான், கட்டம் போட்ட கைலி என தமிழக சினிமாக்காரர்களால் அடையாள படுத்தப்பட்ட முஸ்லிம் பாத்திரங்கள் தான். உண்மையில் சினிமாவில் காட்டுகின்ற துருக்கித் தொப்பி தாயத்து என்பவற்றுக்கும் தமிழகத்து



முஸ்லிம்களுக்கும் உள்ள சம்பந்தம் மிக மிக தூரமானது என்பதுடன் முக்கியத்துவமுமற்றது. தேசிய நீரோட்ட முஸ்லிம் பெரும்பான்மையினரின் சாமான்ய வாழ்வியல் உடை பண்பாட்டு கலாச்சார அடையாளத்தை நிறுவும் குறிகாட்டிகளாக் அவ்வாறான காட்சிப்படுத்தல்களை கொள்ள முடியாது.

எல்லோரும் கொண்டாடுவோம் பாடலில் வரும் தொகையறா வரிகளில் "ஆடவரும் அத்தனையும் ஆண்டவனின் பிள்ளையடா" (ஆடவராத அத்தனையும் ஆண்டவனின் பிள்ளையில்லை என்ற எதிரிடையான கருத்து இவ்வரிகளின் எதிர்க் கருத்தாக அமைந்து .இவ்வரிகளை அர்த்தமற்றதாக்குவது ஒருபுறம் இருக்க) இந்த வரிகள் மொத்தத்தில் முஸ்லிகளின் அடிப்படை நம்பிக்கைகளுக்கு முரணானது. கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் அடிப்படையில் பிரித்து நிற்கும் பிரதான அம்சமே கடவுளுக்கு பிள்ளை ஏசு (ஈசா) இல்லை என்பது தானே. அ.்.றிணையில் சொல்லப்பட்டாலும் இந்த அர்த்தமற்ற, தங்களின் மத அடிப்படை கொள்கைக்கு முரணான வரிகளை மொத்த பாட்டின் பொருளில் லயித்து பொருட்படுத்த முஸ்லிம்கள் தவறிவிட்டார்கள் என்பதால்தான் இந்தப் பாடல் முஸ்லிம்களால் இன்றுவரை "விரும்பிக்" கேட்கப்படுகிறது. நாகூர் ஹனிபா இந்தப் பாட்டை தனித்து வேறு பாடியுள்ளார். அவரும் அந்த தொகையறாவுடன் சேர்த்தே பாடியுள்ளார். அதில் சுவாரசியம் என்னவென்றால் அவர் தலையில் துருக்கித் தொப்பியோ அல்லது வேறு எந்த தொப்பியோ அணியாமல், கைலி கட்டாமல், றப்பான் அடிக்காமல் நீண்ட காற்சட்டை (Trousers) (கழுத்திலே ஏதோ ஒரு மணி மாலை) அணிந்து பாடியுள்ளார்.

உதுமானிய முஸ்லிம் கிலாபா கால கலாச்சார எச்சங்கள் ஆங்காங்கே இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் ஒரு வரலாற்று நீட்சியாக காணப்பட்டன என்பதால், மறைந்த இந்திய முஸ்லிம் லீக் தலைவர் காய்தே மில்லத் இஸ்மாயில் சாகேப், குஞ்சம் உள்ள துருக்கித் தொப்பியையே அணிந்திருந்தார். ஆயினும் அது பொதுவாக முஸ்லிம்கள் அணிகின்ற தொப்பியல்ல. ஒரு குறிப்பட்ட தொப்பியை அணியும் வழக்கம் முஸ்லிம் அரசியல் தலைவர்களிடையே காணப்பட்டிருக்கிறது. இப்போதும் சிலரிடம் காணப்படுகிறது. மக்காவில் பிறந்து இந்தியாவில் சிறு பிராயமுதல் வாழ்ந்து இந்திய சுதந்திரத்துக்காக காந்திஜியுடன் இணைந்து போராடிய அறிஞர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் கூட பல வேளைகளில் கறுப்பு தொப்பி அணிந்திருப்பார். இந்த தொப்பி குஞ்சமில்லாத, சற்று பெரிய தொப்பி. பாகிஸ்தானின் சிற்பி காயிதே ஆசெம் முகம்மதலி ஜின்னாவும், இஸ்லாமிய மத நடைமுறைகளில் ஆர்வம் காட்டாதவர். என்றாலும் அவரும் சிறிதாக ஒரு தொப்பிய்ய அணிந்து காணப்பட்டுள்ளார். அதிகம் ஏன், முன்னாள் இந்தியப் பிரதமர் மறைந்த நேருஜியும், அண்மையில் மறைந்த இந்தியாவின் ஏழாவது பிரதமர் வீ.பீ. சிங்கும், (வீ.பீ.சிங் அணிந்த தொப்பி மௌலானா அபுல் கலாம் ஆசாத் அணிந்த தொப்பியை ஒத்தது) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஏன பிரபலங்கள் பலரும், மேலும் காங்கிரஸ் தலைவர்கள் தொண்டர்கள் என வெள்ளைத் தொப்பி அணிவதை காங்கிரசின் கட்சி அடையாளமாகவே கொண்டிருந்தனர்.

# உடல் எடை, தொன்மங்களும் உலக அழிவு பிரச்சாரமும்

- ஆர். அபிலாஷ்

நீரிழிவு, இரத்தக்கொதிப்பு, மாரடைப்பு, இரத்தக்கொழுப்பு, பருமன் போன்ற மெட்டொபொலிக் நோய்களின் பட்சத்தில் பெரும்பான்மையான ஆரோக்கிய பராமரிப்பு பொறுப்பு நோயாளிகளிடம் தான் இருக்கிறது. பொறுப்பு எப்போதுமே பெரும் தனிமனித நெருக்கடியை ஏற்படுத்தும். அதனாலே இத்தகைய நோயாளிகள் பிறரை போலல்லாது சதா குற்றவுணர்வுடன் நெருக்கடியுடன் திரிகிறார்கள். தொடர்ந்து அவர்களின் நோய் நிலைமை மேலும் சீரழிக்கும் படியே நமது பண்பாடும் சூழலும் செயல்படுகின்றன.

பொதுவாக நீரிழிவாளர்கள் குறைவான கொழுப்பு, மாச்சத்துக்கள் கொண்ட உணவை உட்கொள்ள வேண்டும் என மருத்துவ அறிக்கைகள் திரும்பத் திரும்ப சொல்லுகின்றன. இவை மேற்கத்திய சூழலின் அடிப்படையில் உருவான நம்பிக்கைகள். மேறகில் கடந்த ஐம்பது வருடங்களாக துரித உணவுக கலாச்சாரத்துக்கு இணையான வலுவான பத்திய உணவுக் (diet food) கலாச்சாரமும் உள் ளது. அங்கு அதிகமாக காய்கறிகளை பச்சையாக புசித்தல், செயற்கை இனிப்புகளை பயன்படுத்துதல், முடிந்தவரை உணவை பொரிக்காமல் கிரில்லிங் முறையில் சுட்டு தின்பது ஒரு நவீன மோஸ்தராக, உயர்வுர்க்க பண்பாட்டு அடையாளமாக உள்ளது. மேலும் பெண்கள் உடலை ஒல்லியாக வைத்திருப்பதற்காக சாப்பிட்டு வேண்டுமென்றே தொண்டைக்குள் விரல்விட்டு வாந்தியெடுக்கும் பழக்கம் ஒரு உளவியல் கோளாறாக தோன்றி சீரழியும் அளவுக்கு உடல் தோற்ற பிரக்ஞை வலுவாக உள்ளது. ஆனால் இங்கு ஆரோக்கியமாக இருப்பதென்றால் பருமனாக இருப்பது என்ற நம்பிக்கை மக்களின் உளவியலில் ஆழமாக வேரூன்றி உள்ளது.

எங்களூரில் பெண்கள் வயதுக்கு வந்ததும் அவர்களுக்கு தொடர்ச்சியாக பாலில் முட்டையடித்து கொடுத்து குண்டாக வைப்பார்கள். குண்டான பெண்கள் தான் தமிழ் சினிமாவில் கவர்ச்சிக் குறியீடுகளாக இருந்து வருகிறார்கள். கேரளாவில் ஆண்கள் தொப்பை வைத்திருப்பது கலாச்சார மனதின் ஒரு பகுதியாகவே உள்ளது. ஆக நாம் பருமனை கொண்டாடும் ஒரு சமூகம். அதற்கு பல்லாயிரம் வருடங்களாக நாம் தொடர்ந்து சந்தித்து வந்துள்ள உணவுப் பஞ்சங்கள் ஒரு காரணமாக இருக்கலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

உணவுப்பஞ்சத்தை தொடர்ந்து நேரிடும் ஒரு சமூகத்தில் மக்களின் உடலில் இயல்பாகவே உணவை ஆற்றலாக செரிக்கும் ஆற்றல் குறைகிறது. கொழுப்பை அதன் வழி சேமிப்பது தேவையாகிறது. மேலும் குறைவாக உணவுள்ள சூழலில் மக்கள் ஆற்றல் குறைவால் மயங்கி விழாதிருக்கும் பொருட்டு உடல் இயல்பாகவே இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவை அதிகமாக்கி வைக்கிறது. நாம் நமது வரலாற்றின், அதில் உள்ள விபத்துகளின் சந்ததிகள். நம் குருதியில் இன்றும் பசியால் தவித்த ஒரு சமூக மக்களின் அழுகுரல் உள்ளது. நமது மரபணுக்கள் நம்மை மற்றொரு பஞ்சத்தில் இருந்து நம்மை காப்பாற்றும் பொருட்டு கொழுப்பை சேகரித்தபடி உள்ளது.

இப்படியான வரலாறு மற்றும் பண்பாட்டில் வரும் மக்களிடம் வந்து திடீரென குறைந்த கொழுப்பு சீனி உள்ள உணவை உட்கொள்ளுங்கள், உடலை ஒல்லியாக வைத்திருங்கள் என வலியுறுத்துவது அபத்தமானது. நம் மக்களோ பண்பாடோ அதற்கு தயாராக இல்லை.

பல மனைவிகள் தாம் சுவையாக சமைத்த உணவை ஏன் கணவன் குறைவாக சாப்பிடுகிறான் என கசப்புறுவார்கள். அவர்கள் இரண்டு தோசைக்கு பதில் நான்கு சாப்பிடுங்கள் என்று வலியுறுத்தி இரத்த குளுக்கோஸை எகிற வைப்பார்கள். இதை அவர்கள் வேண்டுமென்றே செய்வதில்லை. அன்புத்தொல்லையும் அல்ல. அவர்களின் ஆழ்மனதில் ஆரோக்கிய உணவருந்தல் என்றால் தட்டு நிறைய வைத்து புசிப்பது தான்.

நீரிழிவு போன்ற நோய்கள் மனிதனின் உள்ளுணர்வுக்கு நேர்மாறாக மூளையை மட்டுமே ஆலோசித்து சாப்பிட வேண்டிய நிலையை ஏற்படுத்துகின்றன. மனிதன் அடிப்படையில் இனிப்பான கொழுப்பு மிகுந்த உணவைத் தான் விரும்புகிறான். நார்ச்சத்து மிகுந்த தாவர உணவு அவனுக்கு விருப்பத்தையோ நிறைவையோ தருவதில்லை. இது பழக்கம் சார்ந்த உணர்வல்ல. இது நம் உயிரியல் இயல்பு. ஏனென்றால் இனிப்பான உணவு உடனடியாக நமக்கு அபரிதமான ஆற்றலை வழங்கும். கொழுப்பு நம் அணுக்களின் கட்டுமானத்துக்கு அவசியம். நீரிழிவின் போது மூளைக்கும் உள்ளுணர்வுக்கும் இடையே ஒரு தொடர் போராட்டமே நிகழ்கிறது. உடல் தருகின்ற சமிக்ஞைகளை ஒருவன் உதாசீனித்தபடியே இருக்க நேர்கிறது. ஆனால் இது எப்போதும் சாத்தியம் அல்ல.

அநேகமான மருத்துவர்கள் இந்த நோய்களுக்கு வெளியே இருந்து கருத்தியல் பூர்வமாக மட்டும் இவற்றை அணுகுபவர்கள். அவர்கள் எப்போதுமே எளிமைப்படுத்துவார்கள். குறைவான கலோரி உணவு, அரைமணி நடைபயிற்சி இருந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று. ஆனால் இது எளிதில் சாத்தியமா?


பொதுவாக நீரிழிவு இரத்தக்கொழுப்பு எல்லாமே முதுமையின் நோய்கள் தாம். துரதிஷ்டவசமாக கடந்த நூற்றாண்டில் இவை இளைஞர்களின் நோயாகி விட்டதால் மனித குலம் இளமைக்காலத்தில் முதியவர்களின் சமூக வாழ்க்கையை எப்படி வாழ்வது என புரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறது.

உணவு, அதனால் ஏற்படும் உடல்பருமன், இதைக் குறைக்க உடற்பயிற்சி எனும் இந்த ஆலோசனை எந்த அளவுக்கு பயன்படும்? முதலில் மனிதர்கள் பருமனாய் இருப்பதற்கும் அவர்களின் உணவுப் பழக்கத்திற்கும் அதிக சம்பந்தம் இல்லை என்பது புரிந்து கொள்ள வேண்டும். இது ஒரு தொன்மம் மட்டுமே. குண்டாயிருக்கிற பலர் 'நான் ரொம்ப குறைவாகத் தான் சாப்பிடுகிறேன்' என்று லேசாய் குற்றவுணர்வு தொனிக்க கூறுவதைக் கேட்டு நக்கலாய் அதற்கு புன்னகை புரிந்திருப்போம். நம் சந்தேகம் எளிது. குறைவாய் சாப்பிட்டால் எப்படி உடம்பு இவ்வளவு பெரிதாகும். ஆக சுயக்கட்டுப்பாடு இல்லாதவர்கள், சோம்பேறிகள், ஒழுக்கம் இல்லாதவர்கள் தாம் பருமனாக இருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வருகிறோம்.

கிராமப்புறங்களுக்கு போய்ப் பாருங்கள். எத்தனையோ பேர் வாழ்நாள் முழுக்க குண்டாக இருப்பதான பிரக்ஞை இல்லாமலே வாழ்ந்து மறைந்திருப்பார்கள். அவர்களிடம் யாரும் போய் ஏன் குண்டாக இருக்கிறாய் என்று விசாரிப்பதில்லை. நேர்மாறாக அங்கு ஒல்லியாய் இருப்பவர்கள் பார்த்தால் தான் 'ஏன் சவலையாய் இருக்கிறாய்' என வருத்தத்தோடு விசாரிப்பார்கள். ஆக பருமன் குறித்த விசனிப்புகள் ஒரு நகர்மய பண்பாட்டு மனநிலை தான்.

> பொதுவாக நீரிழிவு இரத்தக் கொழுப்பு எல்லாமே முதுமையின் நோய்கள் தாம். துரதிஷ்டவசமாக கடந்த நூற்றாண்டில் இவை இளைஞர்களின் நோயாகி விட்டதால் மனித குலம் இளமைக் காலத்தில் முதியவர்களின் சமூக வாழ்க்கையை எப்படி வாழ்வது என புரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறது.

மேற்கில் இது குறித்த ஆய்வுகள் செய்த சாண்டர் கில்மன் (Fat Boys: A Slim Book இவரது நூல்) முன்பு ஐரோப்பாவில் குண்டாயிருப்பது எப்படி மேற்தட்டினரின் அடையாளமாக இருந்தது என்று சொல்கிறார். மன்னர் பதினான்காவது லூயிஸ் தன் உடலைச் சுற்றி பஞ்சுப் பொதியை சுற்றி தன்னை குண்டாக காட்டிக் கொண்டார். அது மட்டுமல்ல அன்று குண்டானவர்கள் பாலியல் திறன் மிக்கவர்கள் என்ற நம்பிக்கை இருந்தது. ஷேக்ஸ்பியரின் பால்ஸ்டாப் கதாபாத்திரம் ஒரு நல்ல உதாரணம். ஷேக்ஸ்பியர் தனது ஜூலியஸ் ஸீஸர் நாடகத்தில் குண்டானவர்கள் அடிப்படையில் நல்லவர்கள் என்ற கருத்தை முன்வைத்தார். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொழில்மயமாக்கலும் அதனாலான உணவுப்பெருக்கமும் நிலைமையை தலைகீழாக்கியது. கீழ்த்தட்டினர் அதிக குண்டாக, பருமன் ஆற்றலின்மையின் மலடுத்தன்மையின் குறியீடானது.



நம்மை இன்று அச்சுறுத்தக் கூடிய அநேக நோய்கள் பாரம்பரியமானவை. பருமனும் உள்ளிட்டு. உடம்பில் மெட்டொபொலிசம் குறைவாக உள்ளவர்கள் சாதாரணமாக சாப்பிட்டாலே குண்டாவார்கள். இவர்களை ஒல்லி யாக்குகிறோம் பேர்வழி என்று விரதமிருக்க வைத்து ஏகத்துக்கு உடற்பயிற்சி செய்ய வைத்து அதிரடியாய் 15 கிலோ குறைத்தால் கூட விரைவில் திரும்ப ஏறிவிடும்.

அப்படி இழந்த எடை திரும்ப போடுவது தான் உடலுக்கு அதிக ஆபத்தானது. உண்மையில் ஒருவர் பருமனாயிருப்பதில் ஆபத்தில்லை. அவர் தன்னளவில் தன்னை சுறுசுறுப்பாக வலுவாக வைத்துக் கொண்டால் போதும். இன்னொரு விசயம் தினமும் உடற்பயிற்சி செய்து கட்டுமஸ்தாக இருக்கும் பல பேருக்கு கூட இதய நோய் வருகிறது என ஆய்வுகள் நிருபித்து உள்ளன. அதாவது ஒல்லியாக அல்லது கட்டுறுதியாக இருப்பதால் ஒருவருக்கு நீரிழிவோ மாரடைப்போவராது என எந்த உறுதியும் இல்லை. தொடர்ந்து ஆரோக்கியமான வாழ்வு வாழ்பவர்கள் நீண்ட நாள் வாழ்வார்கள் என இதுவரை நிரூபிக்கப் பட்டதும் இல்லை. மாறாக உடற்பயிற்சியே செய்யாமல் தினசரி குடித்து கொழுப்பு இனிப்பு மிகுந்த உணவுகளை உண்டும் வாழ்ந்த எத்தனையோ பேர் எண்பது நூறு வயது வரை எந்த மெட்டொபொலிகல் பிரச்சினையும் இன்றி வாழ்ந்ததை நாம் அன்றாட வாழ்விலே பார்ததிருக்கிறோம். பிரபல உயிரியல் எழுத்தாளர் 'டெஸ் மண்ட் மோரிஸ் ஒரு கட்டுரையில் தனது அம்மா எந்த ஒரு கட்டுப்பாடும் இன்றி தன்னிச்சையாக உணவு உண்டு 99 வயது வரை வாழ்ந்ததை குறிப்பிடுகிறார். 'நமக்குப் பிடிக்கிற உணவுகளே சரியான உணவுகள்' என்பது அவரது அம்மாவின் தத்துவம். இதனடிப்படையில் மோரிஸ் நமது நவீன வாழ்வின் உணவுக் குழப்பத்தை அலசுகிறார்.

நமது பிரச்சினை நாம் பிரக்ஞைபூர்வமாக உண்ணத் துவங்கி விட்டோம் என்பதே என்கிறார் டெஸ மண்ட் மோரிஸ். எந்த உணவை எடுத்தாலும் இது நமக்கு நல்லதா என மூளையால் அலசுகிறோம். பதற்றப்படுகிறோம். பதற்றப்படும் போது இயல்பாகவே நமது இதயத்துடிப்பு எகிறுகிறது. பஞ்சம் மற்றும் பிற ஆபத்துக்கள் வருகின்றன என உடல் குழம்புகிறது. அதனால் அது நாம் உண்ணும் பத்திய உணவை கூட முழுமையாக செரித்து உறிஞ்சாமல் அதில் உள்ள கொழுப்பை செலவழிக்காது எதிர்காலத்துக்காக சேகரிக்க தலைப்படுகிறது. இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவை ஏற்றுகிறது. மேலும் இதே காரணத்தினால் விரதம் இருப்பவர்களுக்கு அதிகமாக உண்ணும் தூண்டுதல் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. விளைவாக குறைவாக உண்ண வேண்டுமே என்ற எண்ணமே ஒருவரை அதிகமாக உண்ண வைக்கிறது. இந்த உணவினால் எனக்கு நோய் ஏற்படுமோ என்று கலக்கத்துடன் உண்பவர்களுக்கு எளிதில் உடல் பருக்கிறது. நமது உண்மையான பிரச்சினை உணவில் உள்ள கொழுப்பும் இனிப்பும் அல்ல. அது மருத்துவர்களும் உணவு நிறுவனங்களும் சேர்ந்து உருவாக்கிய போலியான பீதியும் தொன்மங்களும் தான்.

# மீதமுள்ள கண்ணிவெடிகளை அகற்ற குறைந்தது 5 வருடங்களாகும்

## வடக்கு, கிழக்கு மிதிவெடி செயற்பாட்டலுவலர்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீதமுள்ள கண்ணிவெடிகளை அகற்ற ஆகக் குறைந்தது 5 வருடங்களாவது வேண்டும் என வடக்கு, கிழக்கு மிதிவெடி செயற்பாட்டலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் இறுதிவரையில் இனங்காணப்பட்ட பகுதிகளில் 90.54 சதவீதம் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் பல்வேறு கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் யாழ். மாவட்டத்தில் பணியாற்றிய போதும், நிதிப்பற்றாக்குறை காரணமாக அவை வெளியேறி விட்டன.

இந்நிலையில் 4 இலட்சத்து 149 ஆயிரத்து 740 சதுர மீற்றர் பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட வேண்டி உள்ளது. இதில் ஒரு இலட்சத்து 201 ஆயிரத்து 468 சதுர மீற்றர் பரப்பளவில் தற்போது கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன எனத் தெரிவித்தார்.

# வீதியோரங்களில் குப்பைகள் அசிங்கப்படுத்தும் கால்நடைகள்

(குருநகர்)

வீட்டுப் பாவனைக்கழிவு பொருட்கள், பழுதடைந்த உணவு வகைகள் மற்றும் குப்பை கூழங்கள் சொப்பிங் பாய்க்குகளில் போட்டு போறைப் பைகளை நிரப்பி வீதிஓரங்களில் வைப்பதால் அவற்றை நாய்கள் கால்நடைகள் வீதிகளில் சிதிலமடையச் செய்துவருகின்றன.

மாலை இரவு வேளைகளில் இவ்விதக் குப்பை பைகளை வீட்டுக்கு வீடு வீதியோரங்களில் பாவனையாளர்கள் எடுத்து வைத்து விடுகின்றனர். இரவு`பூராகவும் அவற்றை கவ்விச்செல்லும் நாய்கள் இங்குமங்குமாகப் பைகளைப் பிரித்துப்போடுவதால் அச்சூழல் மாசடைந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக வண்.வடமேற்கு சிவப்பிரகாசம் வீதி, கேசாவில் வீதி என்பவற்றில் காலை நேரங்களில் இத்தகைய குப்பைச் சிதிலங்களால் வீதிகளில் பயணிப்போர் மத்தியில் அருவருப்பை ஏற்படுத்துவதாகவும் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (68)

# வீதி அகலிப்பால் ஆலமரங்கள் தறிப்பு

(குருநகர்)

யாழ்.காங்கேசன்துறை வீதியில் பன்னெடுங்காலமாக சாந்தை விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக நின்ற பாரிய அரச மரம் அடியோடு அகற்றப்பட்டுள்ளது.

அதற்குச் சமீபமாக யாழ். மின்சார சபை அலுவலக அருகில் நின்ற ஆலமரமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

மேலும் மற்றோரு ஆலமரமொன்றும் அப்பகுதியில் காணப்படுகிறது. தட்டாதெருச் சந்தியில் காணப்படும் அரச மரமும் விரைவில் அகற்றப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதி அகலிப்பை மேற்கொள்ள அகற்றப்படும் மரங்களின்மையால் எதிர்வரும் வேனிற்காலங்களில் நிழல்மரங்கள் அற்ற சூழலில் வீதிகளில் பயணிக்கும் மக்கள் வெயில் தகிப்பை அனுபவிக்கநேருமென்ற கவலையும் மக்களால் தெரிவிக்கப்பட்டுவருகிறது. (68)

# கிளிநொச்சி இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினரால் (NAITA) கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுவருகிறது அந்த வகையில் கடந்த வாரம் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய மாணவர்களுக்கும் பாடசாலைகல்விக்கு பின்னர் எவ்வகையான தொழில் முயற்சிகளில் ஈடுபடலாம் என்பது தொடர்பில் இந்நிறுவனத்தைச்சேர்ந்த அதிகாரிகளால் கருத்துரைகள் வழங்கப்பட்டது

கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக இந்த தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகிறது மேற்படி நிறுவனத்தின் தொழில் வழிகாட்டல்அலுவலர் வைகுந்தன் மற்றும் தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் வலய கல்வித்திணைக்களம் வீரசுதாகரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

கிளிநொச்சி மாவ்ட்ட கல்வித்திணைக்களத்துடன் இணைந்து மேற்படி நிறுவனத்தினர் இத்தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகளை வழங்கிவருகின்றனர் (29)

# இலத்திரனியல் ஓகன் இசையில் கின்னஸ் உலக சாதனை முயற்சி





(யாழ்ப்பாணம்)

இலத்திரனியல் கீபோட் ஓகன் இசைக் கச்சேரியில் கின்னஸ் உலக சாதனை முயற்சியை யாழ்ப்பாணம் உட்பட பல்வேறு இடங்களைச் சேர்ந்த 162 சிறுவர்கள் மேற்கொண்டனர். யாழ்ப்பாணம் இலத்திரனியல் கீபோட் ஆசிரியர் எல்.பி. அன்ரன் டயசின் நெறியாள்கையில் கொழும்பு மகிந்த ராஜபக்ஷ தாமரைத்தடாக கலையரங்கில் இக் கின்னஸ் உலக சாதனை முயற்சி இடம்பெற்றது.

இந் நிகழ்விலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட மகளிர் விவகார சிறுவர்பாது காப்பு பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் சிறுவர்களின் சாதனை முயற்சியை பாராட்டினார்.. (01)

# 2013 புத்தாண்டும் பலன்களும்

## துலாம்

உடுத்தும் உடையையும் உள்ளிருக்கும் மனசையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் நீங்கள் யாருக்கும் தீங்கு நினைக்க மாட்டீர்கள். உங்கள் இராசிக்கு 10ஆவது வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் கடின உழைப்பால் சாதிப்பீர்கள். மனப் போராட்டங்கள் ஓயும். சமயோசிதமான பேச்சால் தடைப்பட்ட வேலைகளை முடிப்பீர்கள். எதிர்பார்த்து காத்திருந்த பணம் கைக்கு வரும். பழைய கடனை அடைக்க வழி வகைகள் கிட்டும். பிள்ளைகளுடன் கனிவாகப் பழகுவீர்கள். மகனுக்கு திருமணம் கூடிவரும். வருடம் பிறக்கும்போது செவ்வாய் 4ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் தாழ்வு மனப்பான்மை நீங்கி தன்னம்பிக்கை பிறக்கும். நெருக்கமானவர்களுடன் மோதல், தாயாருக்கு மருத்துவச் செலவுகள், சொத்து தகராறுகள் வந்து செல்லும். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். வருடம் பிறக்கும் போது ராசிக்குள் ராகு நிற்பதால் தலைவலி, மயக்கம், குமட்டல், நாக்கில் கசப்பு என வந்து நீங்கும். சில சமயங்களில் முன்கோபத்தால் எடுத்தெறிந்து பேசுவீர்கள். யோகா, தியானம் செய்யத் தவறாதீர்கள். 7ஆம் வீட்டில் கேது அமர்வதால் கணவன்-மனைவிக்குள் அடிக்கடி சண்டை வரும்.

மற்றவர்கள் சொல்வதை கேட்டு கணவன்-மனைவிவழி உறவினர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். மே 28ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 8ஆவது வீட்டில் குரு மறைந்திருப்பதால் பணம் எவ்வளவு வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். சொந்த பந்தங்களுக்காக சில சமயங்களில் அலைய வேண்டி வரும். வீண்பழிச் சொல்லுக்கு ஆளாவீர்கள். வாகனத்தால் சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். ஆனால் மே 29ஆம் திகதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் அமர்வதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். கௌரவப் பதவிகள் தேடிவரும். தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

தோல்வி மற்றும் தாழ்வுமனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். குடும்ப மோதல்கள் நீங்கும்.

வாரிசு உண்டாகும். அடிமனதில் இருந்த பய உணர்வு நீங்கும். வங்கி கடனுதவியுடன் வீடு கட்டி முடிப்பீர்கள். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். கோயில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். இப்போதைவிட அதிக சம்பளம், சலுகையோடு நல்ல வேலை கிடைக்கும். வெகுநாள் கனவான புதிய நிலம், வீடு வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்தை சீரமைப்பீர்கள். எதிர்பார்த்து காத்திருந்த வெளிநாட்டுப் பயணம் சாதகமாக அமையும். தந்தையின் உடல் நிலை சீராகும்.

வெளிவட்டாரத்தில் உங்களின் புகழ், கௌரவம் உயரும். சமாளிக்க முடியாத பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். முதுகுவலி, நீரிழிவு நோயின் தாக்கம் குறையும். நாடாளுபவர்கள் அறிமுகமாவார்கள். ஆன்மிகத்தில் மனம் லயிக்கும். அரசாங்க விஷயங்களில் அலட்சியம் வேண்டாம். வாகனம் செலவு வைக்கும். ஜென்மச் சனி தொடர்வதால் உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். மருத்துவப் பொதுப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. வாயுக் கோளாறால் நெஞ்சு வலி, செரிமானக் கோளாறு வரும். நாக்கை கொஞ்சம் கட்டுங்கள். கணவன்-மனைவிக்குள் அவ்வப்போது வாக்குவாதங்கள் வரத்தான் செய்யும். அதை பெரிதுபடுத்த வேண்டாம். யாருக்கும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். நாடாளுபவர்கள், பிரபலங்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

கன்னிப் பெண்களே! காதல் மற்றும் உயர்கல்வி சம்பந்தப்பட்ட குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை உணருவீர்கள். தாயுடனான கருத்து வேறுபாடுகள் விலகும். கல்யாணம் விமரிசையாக முடியும். விட்ட பாடத்தை மீண்டும் எழுதி வெற்றி பெறுவீர்கள்.

மாணவர்களே! உங்களோடு சுற்றித் திரிந்த நண்பர்கள் கூட நல்ல மதிப்பெண் பெற்று வெற்றி பெறக்கூடும். எனவே படிப்பில் அக்கறை செலுத்துங்கள். வகுப்பறையில் முன் வரிசையில் அமருங்கள்.


அரசியல்வாதிகளே! அதிகாரிகளே! ஓய்வெடுக்க முடியாதபடி வேலைகள் இருக்கும். தலைமையின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். என்றாலும் சிலரால் குழப்பங்களும் இருக்கும்.

வியாபாரிகளே! தளபாடங்கள், மருந்து, இரும்பு வகைகளால் ஆதாயம் உண்டு. வேலையாட்கள் மற்றும் கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் புரிந்து கொள்ளாமல் அவ்வப்போது குடைச்சல் தந்தவர்கள் இனி பணிந்து போவார்கள். பழைய பங்குதாரர்களும் தேடி வருவார்கள். கணனி துறையினர்களே! வேலையில் திருப்தியில்லாமல் போகும். அயல்நாட்டு வாய்ப்புகள் வந்தால் யோசித்து ஏற்பது நல்லது.

கலைத்துறையினரே! வாய்ப்பு வரும் என்று காலம் கடத்திக் கொண்டிருந்தீர்களே! இனி பொறுப்பாக செயல்பட்டு சிறிய வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வீர்கள்.

விவசாயிகளே! நவீனரக உரங்களால் விளைச்சலை அதிகப்படுத்துவீர்கள். ஊரில் மதிப்பு, மரியாதை கூடும். இந்த 2013ஆம் ஆண்டு ஆரோக்கிய குறைவையும் போராட்டத்தைத் தந்தாலும் ஓரளவு அந்தஸ்தையும் அதிகப்படுத்தும். (தொடரும்...)

# தமக்கென கட்டித்தரப்பட்ட வீடுகளை தம்மிடமே ஒப்படைக்குமாறு கோரிக்கை



(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் 2000ஆம் ஆண்டு இடம் பெற்ற யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பரவலாக வசித்து வந்தனர். பின்னர் 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினை அடுத்து அவர்களுக்கு அரசாங்கம் வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கற்கோவளம் கிராம அலுவலர் பிரிவில் புனிதநகர் மற்றும் வல்லிபுரவெளி ஆகிய கிராமங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வீடுகள் அமைக்கப்பட்டன. அவ்வீடுகளை அமைக்கும் போது வீட்டிற்கு உரியவர்களும் மேலதிக பணத்தைச் செலவிட்டு வீடுகளை வசதியாக அமைத்துக் கொண்டதுடன், பயன்தரும் மரங்களையும் நாட்டி அவ்வீடுகளில் வாழ்ந்து வந்தனர். பின்னர் வடமராட்சி கிழக்கில் மூன்றாம் கட்ட மீள்குடியேற்றம் இடம்பெற்ற காலத்தில் தமது பூர்வீக இடமான நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் கிழக்கு பகுதிகளில் சென்று கடற்தொழில் வசதிக்காக தமது பதிவுகளை மாற்றி குடியேறினர். தற்போது வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் தமது பகுதியில் பதிவு இல்லாதவர்களுக்கு வீடுகளை வழங்க முடியாது அவற்றை மீளப்பெறும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்.

எனவே தமது பூர்வீக இடங்களுக்குச் சென்றவர்கள் வீடுகளை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக 42 குடும்பங்களும் வடமராட்சி ஈ.பி.டி.பிஅலுவலகத்தில் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் அவர்களைச் சந்தித்து தமது கோரிக்கையை எடுத்துக் கூறியுள்ளனர். இது தொடரபாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு எடுததுச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



புத்து வெட்டுவானிலிருந்து மல்லாவி செல்லும் பாதையில் அமைந்துள்ள ஐயன்குளம் அண்மையில் பெய்தமழையினால் பலத்த சேதமடைந்துள்ளதைக் காணலாம். (09)

# விண்ணப்பங்கள் கோரல்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவர் விடுதியில் தங்கி, கல்வியினை கற்க விரும்புகின்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மாணவர் விடுதியில் தங்கி கல்வியினை மேற்கொள்ள விரும்புகின்றவர்கள் அலுவலக நேரத்தில் வந்து அனுமதியினைப் பெற்று விடுதியில் இணைந்து கொள்ள முடியும் என மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவர் விடுதியானது நீண்ட காலமாக செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன், இவ் விடுதியானது மீளவும் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களுக்கான சேவையினை சிறப்பாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மூடப்பட்ட ஆட்டிறைச்சிக் கடைகள் கோழி இறைச்சிக் கடைகளாக மாறும்

(யாழ்ப்பாணம்)

ஆடுகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினாலும் விலை அதிகரிப்பினாலும் வலி. தென் மேற்குப் பிரதேசத்தில் மூடப்பட்டிருக்கும் ஆட்டிறைச்சிக் கடைகள் கோழி இறைச்சிக் கடைகளாக மாற்றப்படவுள்ளன.

வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது. குடாநாட்டில் ஆடுகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வலி. தென் மேற்கு பிரதேசத்தில் இயங்கி வந்த ஆட்டிறைச்சிக் கடைகள் மூடப்பட்டுள்ளன. ஆட்டிறைச்சிக் கடைகளைத் திறப்பதற்கு 2013ஆம் ஆண்டுக்கான கேள்வி கோரப்பட்டிருந்தபோதும் எவரும் அக்கடைகளை எடுக்க முன்வரவில்லை.

பிரதேச சபையின் மாதாந்த வருமானத்தைக் கருத்திற் கொண்டு மூடப்பட்டிருக்கும் ஆட்டிறைச்சிக் கடைகளை கோழி இறைச்சிக் கடைகளாக மாற்றுவது தொடர்பாகச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை இப் பிரதேச சபையின் கீழுள்ள கோழி இறைச்சிக் கடைகளில் வியாபாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் சந்தையிலிருந்து 500 மீற்றருக்குள் கோழி இறைச்சி விற்பதற் குத் தடை விதிக்கப்பட்டிருக்கும் நடைமுறையை ஆயிரம் மீற்றருக்கு விஷ்தரிப்பது தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இதேபோல் சந்தையிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் இயங்கும் வர்த்தக நிலையங்களில் மரக்கறி விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்ட தூரத்தை மேலும் விஷ்தரிப்பது தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

# பரமர் சங்கமம்



“விட்டால் கண் போச்சு விழுங்கினால் தொண்டை போச்சு” இந்தப் பழமொழி பாவனையில் மிகவும் அருகி விட்டது.

பழமொழி கூறும் அர்த்தத்தைப் பரமர் அறிந்த அளவுக்குச் சொல்கிறேன்.

பாம்பு எலி எண்டு நினைத்து மூஞ்சூறை கல்வியதாம். அதன் பின்னால் தெரிந்து கொண்ட பாம்புக்குப் பெரும் பாடாப் போச்சாம்.

கவ்வலைத் தளர்த்தி விட்டால் மூஞ்சூறு பாம்பின் கண்களைக் கொத்தி விடுமாம். இல்லாமல் விழுங்கினால் மூஞ்சூறில் இருக்கும் முள்ளொன்று பாம்பின் தொண்டையில் சிக்கிக் கொள்ளும்.

இதனையே அந்தப் பழமொழி சுட்டுவதாக அறிய முடிகிறது. அதற்குப் பொருத்தமான காரண காரியங்களுக்கு மேற்சொன்ன பழமொழி கூறுவதாகவும் அமைந்து விடுகிறது.

எமது அரசாங்கம் பதவியில் நியமித்த பிரமத நீதியரசரை அப்பதவியில் இருந்து விலக்க எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியும் கிட்டத்தட்ட அப் படித்தானை அமைஞ்சிருக்கு.

13ஆவது அரசியல் சட்டத்தை நீக்குவது, திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றுவது போன்ற காரியங்களில் பிரதம நீதியரசர் அரசின் போக்குக்கு வளைந்து கொடாமல் இருப்பதே அவரது பதவிக்கு இலக்கு வைக்கவும் காரணமானது.

அரசுக்கு எதிராக தானீடுபட்டால் வரப்போகும் பிரச்சினைகளையும் தெரிந்துகொண்டே ஒரு தடவைக்குப் பலதடவை சிந்தித்துச் செயலில் இறங்கியிருப்பார். அந்தளவுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக ஒரு பெண்ணாக இருந்தும் துணிச்சலுடன் செயற்பட்டதைச் சொல்ல வேணும்.

தன்னைப் பதவியில் இருந்து நீக்க முடியாதெண்டு தன்தரப்பில் அவர் தெரிவித்துவரும் அதேவேளை, அவரை நீக்குவதற்கான முஸ்தீபுகளை அரசும் எடுத்து வருகிறது. அதேவேளை இது விடயத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சர்வதேசமும் இது விடயத்தில் கவனமெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

புதுக்கடை, லிப்டன் சுற்று வட்டமாக மாறிவிட்டதெனக் கொச்சைப் படுத்தும் அரசுக்கு நீதிக்கு எங்கே குரலெழுப்ப வேணுமெண்டதும் தெரியாமல் போய் விட்டதல்லவா!

“தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாணென்ன முழ மென்ன” என்பதைப் போலதான் அரசின் நிலைமை எண்டைக்கும். முள்ளிவாய்க்கால் பிரச்சினை நாலு வருசங்களையும் எட்டப் போகுது.

மன்னார் நீதிமன்றத்தை தாக்குதலுக்கு உள்ளாக்கி நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடப்பட்ட சங்கதிகளும் நிலுவையில் கிடக்கு.

இப்புடி ஒண்டு மாறி ஒண்டு வந்தால் ‘அற நனைஞ்சவனுக்கு குளிரென்ன கூதலென்ன’ எண்ட மாதிரி பழையதைக் கைவிட வேண்டியதுதானை! இதுதான் அரசின் நடவடிக்கை!

அமெரிக்காவும் ஐ.நா.சபையும் ‘கணம் வாதம் சணம் பித்தம’ போல கிணத்துக்கை கிடந்து குரல் எழுப்புகினம். அதுக்கிடேல்ல அரசின்ர ஆட்சிக்காலமும் முடிஞ்சிடும். இல்லையே பின்னை சொல்லுங்கவன் பாப்பம்...

# புகையிலைச் செய்கை

அல்லைப்பிட்டி விவசாயிகளினால் பெரிதும் விரும்பிப் பயிரிடப்பட்ட பணப்பயிர் என்று அழைக்கப்பட்ட புகையிலைப் பயிரினை இம்முறை 4 விவசாயிகள் மட்டுமே அல்லைப்பிட்டியில் பயிரிட்டுள்ளனர் புகையிலை, மிளகாய் என்பவற்றிக்குப் பதிலாக முருங்கை மரவள்ளி போன்ற மாற்றுப்பயிர்களையே தற்போது அல்லைப் பிட்டி விவசாயிகள் விரும்பிப்பயிரிட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப் படுகின்றது.

# முரசின் இன்றைய பலன்

(09.01.2013– புதன்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 25 ஆம் திகதி. நட்சத்திரம் கேட்டை சித்தம் பின்னிரவு 3.21 வரை. திதி, துவாதசி காலை 8.44. திரயோதசி பின்னிரவு 6.23 வரை. இராகுகாலம் 12.35 - 02.3 வரை. சுபநேரம் 5.03 - 6.33 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செயல்களில் புதுமை. முயற்சிக்குப் பலன். போட்டியாளர்களை வியப்பில் ஆழ்த்தும். தொழில் அபிவிருத்தி. பணவரவும், நன்மையும். வெளியூர் நற்செய்தி. மாணவர்கள் தேர்ச்சி. |
| ரிஷபம் | மாறுபட்டு நடந்தவர்களும், அன்பு பாராட்டுவர். புதிய அனுகூலங்கள். தொழில் வளர்ச்சி. பணவரவு முன்னேற்றம். புதியவர்களும் நட்பு பாராட்டுவர். பிள்ளைகள் விரும்பியது செய்வீர்கள். |
| மிதுனம் | செயலில் இலட்சிய நோக்கம். எதிர்பார்த்த உதவி வரும். மூலதனம் பெருகும். லாபம். சுபநிகழ்ச்சி திட்டம். பணியில் உயர்வு. பால்ய நண்பர்கள் உதவுவார்கள். முயற்சி திருவினை. |
| கடகம் | மனதில் உற்சாகமும், செயல்களில் திறமையும் பரிமளிக்கும். வேலைகள் எளிதில் முடியும். கூடுதல் மூலதனம் செய்வீர்கள். ஆதாயம். நினைத்த பொருள் வாங்குவீர்கள். வெற்றி. |
| சிம்மம் | எதிர்பார்த்த நன்மை. ஏற்றம் கிடைக்கும். உற்சாகமும், நம்பிக்கையும். எதிர்கால சிந்தனை. கூடுதல் பணி. சராசரி பணவரவு. வீட்டுப்பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| கன்னி | பேச்சிலும் செயலிலும் சாந்தம். வேலைகள் இலகுவாகும், புதிய பரிமாணம். உடல் பலம் பெறும். கூடுதல் பணவரவு. அறப்பணி. குடும்பத்தில் சுபநிகழ்ச்சி. சுற்றுலா திட்டம். |
| துலாம் | நண்பர், உறவினர் கருத்துக்கு மதிப்பு. குடும்ப ஆதரவால் நம்பிக்கை. வேலை இலக்கு எட்டும். கண்களின் பாதுகாப்பில் கவனம். கௌரவத்திற்கான செலவுகள். பயணத்தில் கவனம். |
| விருச்சிகம் | நண்பரின் பேச்சு சங்கடம். பெருந்தன்மையால் ஏற்றம். தொழில் சராசரி. செலவு அதிகம் வரும். மருத்துவ சிகிச்சை. எதிர்பார்த்த செய்தி தாமதம். பயணத்தில் மாறுதல். |
| தனுசு | எல்லாம் நன்மையாகவே இருக்கும். மாறுபட்டவர்களும் அன்பு பாராட்டுவர். தொழில், இடையூறு விலகும். அதிக பணவரவு. உடல்நலம் பலம் பெறும். விருந்துண்டு மகிழ்வீர்கள். |
| மகரம் | புதிய திட்டமிடல். இடையூறு செய்வோரை இனங்காண்பீர்கள். தொழில் நல்ல முன்னேற்றம். ஆதாய வரவு. வீட்டுப்பொருட்கள் வாங்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி. ஆரோக்கியம். |
| கும்பம் | சுற்றி நடப்பவையால் மனதில் பாதிப்பு. அனுபவம் தைரியம் தரும். தொழிலில், தொல்லைகள் இருக்கும். நஷ்டத்துக்கு வருத்தம். பணவரவில் தாமதம். நண்பருடன் ஒரு பயணம். |
| மீனம் | முன்பு செய்த உதவிக்கு நற்பலன். மனதில் மகிழ்ச்சி. தொழில் அபிவிருத்தி. ஆதாயம். உறவும் நட்பும் அனுசரணை. விருந்து உபசரிப்பு. அரசு வழியில் அனுகூலம். நல்வாய்ப்புகள். |

24) இலங்கையில் வாழும் சகல இன மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடுவது
1) புத்தாண்டு விழா　　2) தைப்பொங்கல் விழா
3) சுதந்திரதின விழா　　4) வெசாக் கொண்டாட்டம்

25) கிராமப்புறங்களில் குழுவாக விளையாடும் கிராமிய விளையாட்டு எது?
1) சில்லுக்கோடு　　2) பசுவும் புலியும்
3) சடுகுடு　　4) பல்லாங்குழி

26) ஒருவரின் ஆடையில் தீப்பிடித்தவுடன் முதலில் செய்ய வேண்டியது எது?
1) ஓடிச் சென்று நீரினுள் விழுதல்
2) நிலத்தில் விழுந்து புரளுதல்
3) தீப்பிடித்த ஆடையை கிழித்து வீசுதல்
4) சத்தமிட்டு ஏனையோரின் உதவியைப் பெறல்

27) ஒருவர் மயக்கம் அடைந்தால் செய்ய வேண்டியது எது?
1) நோயாளி பருக நீர் கொடுத்தல்.
2) நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுதல்.
3) நோயாளி சுவாசிப்பதற்கு ஏற்ற சூழலை வழங்குதல்.
4) நோயாளியை தனியாக அடைத்து வைத்தல்.

28) வீட்டில் பானம் தயாரிக்க உதவாதது எது?
1) நன்னாரி　　2) எலுமிச்சை　　3) விளாம்பழம்　　4) லாவுல்பழம்

29) இலங்கையிலுள்ள மிக நீளமான ஆறு எது?
1) களனி கங்கை　　2) நில்வள கங்கை
3) மாணிக்க கங்கை　　4) மகாவலி கங்கை

30) அருகில் தரப்பட்டுள்ள வீதிக்குறி மூலம் விளக்கப்படும் கருத்து
1) முன்னால் சிறுவர் கடவை உள்ளது.
2) முன்னால் பாதசாரிகள் கடவை உள்ளது.
3) குழந்தைகள் பாதையைக் கடக்குமிடம்.
4) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம்.




31) வீட்டுத்தோட்டத்தினுள் பூச்சிபீடைகள் உட்செல்வதைத் தடுக்க நடப்படுவது
1) துளசி　　2) காட்டாமணக்கு　　3) செவ்வந்தி　　4) நாயுண்ணி

32) வீட்டுத்தோட்டத்தில் நடும்போது மிக விரைவாக முளைக்கும் வித்து எது?
1) அவரை　　2) பாகல்　　3) புடோல்　　4) பப்பாசி

33) கம்பிகளை வளைக்கவும், வெட்டவும், பற்றிப்பிடிக்கவும் உதவும் உபகரணம்


1)


2)


3)


4)

34) காற்று மூலம் பரம்பலடையும் வித்து எது?


1)


2)


3)


4)



## தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

1) பின்வரும் பந்தியை வாசியுங்கள்

> வெயில் தணிந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. திடீரென மரங்கள் அசைந்து ஆடின. சாதாரணமாக வீசிய காற்று பலமாக வீசத் தொடங்கியது. தூசுக்கள், கடதாசிகள் எல்லாம் மேலே பறந்தன. மரங்கள் சரிந்து சரிந்து ஆடி இயலாமல் முறிந்தன. கூரைத் தகடுகள் காற்றில் பறந்தன. மழையும் பெய்யத் தொடங்கியது. ஓ.... ஓ.... என்ற சத்தத்துடன் காற்று, புயலாக மாறியது.

இப்பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்

1) இப்பந்தியில் விபரிக்கப்பட்ட காட்சி எது?

2) 'ஒலி' என்பதன் ஒத்தசொல் எது? ....................................

3) கீழே என்பதன் எதிர்ச்சொல் எது? ....................................

4) மரம் என்பதன் பன்மைச்சொல் எது? ....................................

5) பெயராகவும், வினையாகவும் வரும் சொல் எது? ....................................

2) பின்வரும் சொற்களை பிரித்து எழுதுங்கள்
1) மண்ணரிப்பு ....................................
2) கற்பாறை ....................................
3) வயற்கரை ....................................
4) பூஞ்செடி ....................................

3) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுங்கள்

1) வேண்டும் / கற்க / கல்வி / அனைவரும்

....................................................................................................

2) சுற்றாடலைச் / சுத்தமாக / வேண்டும் / எமது / வைத்திருக்க

....................................................................................................

4) பின்வரும் பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக எழுதுங்கள்

1) கோழிகள் முட்டையிட்டன ..................................

2) பசுக்கள் புற்களை மேய்ந்தன ..................................

5) நிறுத்தற் குறிகளை இடுங்கள்

1) மாம்பழம் பலாப்பழம் வாழைப்பழம் ஆகியவை முக்கனிகளாகும்

2) அடேயப்பா எவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி

6) பெட்டியிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி நான்கு சொற்கள் எழுதுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வை | ப | ட் | க | ற் | ட | வா | கோ | டு | ரை |
| வ | | ம் | ர | கா | க் | ல் | ம் | | க |

1) .................................. 2) ..................................

3) .................................. 4) ..................................

7) பின்வருவனவற்றின் கருத்தை தமிழில் எழுதுக.


1) Be careful ..................................

2) How are you? ..................................

3) What is this? ..................................

8) பின்வரும் படங்களின் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.





1) .................. 2) .................. 3) ..................

9) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1) றோஹல : ..................................

2) மேசய : ..................................

3) (b)பத் : ..................................

4) தாத்தா : ..................................

10) பின்வரும் படங்களின் சிங்கள உச்சரிப்பை தமிழில் எழுதுக







11) பலா இலையின் வடிவத்தை ஒத்திருக்கும் இலை எது?
1) முசுட்டை 2) கத்தாப்பு 3) நாயுண்ணி 4) வட்டக்கண்ணி

12) வீட்டுத்தோட்டத்தில் காணப்படும் களையுண்டு எது?
1) மூக்குத்திப்பூண்டு 2) நன்னாரி
3) சீதேவியார் செங்கழுநீர் 4) வெடிபலவன்

13) வேர்க்கொம்பு எனும் மூலிகை மருந்து எதிலிருந்து பெறப்படும்?
1) திப்பிலி 2) இஞ்சி 3) மரமஞ்சள் 4) தீக்குறிஞ்சா


14) கால்நடைகள் விரும்பி உண்ணாத தாவரம் எது?
1) ஆடுதின்னாப்பாலை 2) ஆனையறுகு
3) செவ்வந்தி 4) மூக்குத்திப்பூண்டு

15) பூனைகளுக்கு வயிற்றுக்கோளாறு ஏற்பட்டால் உண்ணும் மூலிகைத்தாவரம்
1) பால் அறுகு 2) குப்பைமேனி 3) குப்பைக்கீரை 4) ஆமணக்கு

16) கூட்டம் கூட்டமாக உணவு தேடிச் செல்லும் பறவை
1) மைனா 2) கழுகு 3) ராஜாளி 4) கிளி

17) புத்தக அலுமாரியிலுள்ள புத்தகங்களிடையே வாழ்ந்து, புத்தகங்களை சேதமாக்கும் பிராணி எது?
1) கரப்பான் 2) இராமபாணம் 3) தெள்ளு 4) உண்ணி

18) அருகிலுள்ள மேசைத் தட்டின் ஓரங்களை அழகுபடுத்த உதவியது எது?

A 

1) அடிப்படைத் தையல் 2) நூலோடித் தையல்
3) பின்னல் வகை 4) கம்பளித்தையல்

19) அதிகளவு புரதத்தைக் கொண்ட உணவு எது?
1) காளான் 2) மாஜரின் 3) முந்திரி 4) உருளைக்கிழங்கு

20) வீட்டில் பச்சடி செய்து உண்ணக்கூடிய காய்கறி வகை
1) புடோலங்காய் 2) பாகற்காய் 3) பூசணிக்காய் 4) கத்தரிக்காய்

21) ஜாம் வகைகளை உண்ண முன்பு அவதானிக்க வேண்டிய முக்கிய அம்சம்
1) உற்பத்தி செய்த தினம் 2) SLS இலச்சினை
3) காலாவதியாகும் திகதி 4) விசேட சேர்மானங்கள்

22) பழுதாகிய உணவுகளில் அவதானிக்கக்கூடிய மாற்றம் அல்லாதது.
1) பூஞ்சணம் பிடித்திருத்தல் 2) நீல நிறமாக மாறிய மரவள்ளி
3) நன்றாக கனிந்த பழங்கள் 4) சிவப்பு நிறமாக மாறிய தேங்காய்

23) தேசியக் கொடியை ஏற்றும்போது நிற்க வேண்டிய சரியான கொண்ணிலை

1)  2)  3)  4) 

# ஒபாமாவின் வழியில் இந்தியா பணக்காரர்களுக்கு கூடுதல் வரி




(புதுடில்லி)

பணக்காரர்களுக்கு அதிக வரி விதிப்பது தொடர்பாக மத்திய அரச பரிசீலித்து வருவதாக, அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதே போல், 2.1 இலட்சம் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்கவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெறும். அதில் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவது வழக்கம்.

அதன்படி, 2013-14ஆம் ஆண்டிற்கான பொது பட்ஜெட் தயாரிப்பு பணிகள் வெகு வேகமாக நடந்து வருகின்றன. இப்பணிகளை மத்திய நிதியமைச்சகம் செய்து வருகிறது.


இந்நிலையில், நாட்டிலுள்ள பணக்காரர்களுக்கு அதிகளவில் வரிவிதிப்பது தொடர்பாக மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. சமீபத்தில் அமெரிக்காவில் இத்தகைய வரிவிதிப்பின் மூலம் நடுத்தர மக்களின் ஏகோபித்த ஆதரவை அதிபர் ஒபாமா பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் பொதுத் தேர்தலை கணக்கில் கொண்டு, அது போன்ற ஒரு வரிவிதிப்பைக் கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.



சீரிய சிந்தனையா...? ஆழ்ந்த தூக்கமா...? தலைவரின் குயில் கொஞ்சும் பேச்சில் துயில் கொஞ்சிய பேராசிரியர்... ஸ்டாலினை அடுத்த தி.மு.க.கட்சித் தலைவராக தேர்ந் தெடுப்பது குறித்து நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கருணாநிதி பேசும் போது அவ்வப்போது தூங்கிக் கழித்த பேராசிரியர் அன்பழகன். முடியலடா சாமி...!

# பலாத்கார சம்பவத்துக்கு மாணவியும் தான் காரணம்



(புதுடில்லி)

டில்லியில் பலாத்காரம் செய்யப்பட்டு பலியான மாணவி மீதுதான் தவறு இருக்கிறது என்று ஆன்மீக குருவான “சாமி” அசாராம் பாபு கூறியுள்ளார்.

டில்லி பலாத்கார சம்பவத்தில் வெறும் 5 அல்லது 6 பேர் மட்டுமே குற்றவாளிகள் அல்ல, பலாத்கார சம்பவத்துக்கு மாணவியும் தான் காரணம்.

அவர்கள் தன்னை பலாத்காரம் செய்ய வரும் போது அவர்களை சகோதரர் என அழைத்து, தன்னை பலாத்காரம் செய்யாதீர்கள் என்று கெஞ்சியிருக்க வேண்டும்.

அப்படி அவர் செய்திருந்தால் அந்த பெண் மானத்தையும், உயிரையும் காப்பாற்றியிருக்கலாம்.

அவர்களும் பலாத்காரத்தில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்று கருத்து முத்தை உமிழ்ந்திருக்கிறார் சாமியார் அசாராம் பாபு.

அத்துடன் வரதட்சனைக் கொடுமைகளுக்கு தண்டனை அளிப்பது போன்ற சட்டத்தைப் பயன்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை அளிப்பதை எதிர்க்கிறேன் என்றும் கூறியிருக்கிறார்.

# பிரிட்ஜில் 4வயது மகளை அடைத்து வைத்த தந்தை



(கோதாவரி)

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த நாராயணபுரத்தில் 4 வயது மகளை கடுமையாக தாக்கி, பிரிட்ஜில் அடைத்து வைத்த தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாஷா என்ற அவர் தனது மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு, அவர் மீது இருந்த ஆத்திரத்தில் குழந்தையை தாக்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த காயங்களுடன் பிரிட்ஜில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறுமியை மீட்ட அக்கம் பக்கத்தினர் பாஷாவை பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தியச் செய்திகள்

# மாவோயிஸ்டுகள் தாக்குதல் 7 படையினர் பலி



ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாவோயிஸ்டுகள் வைத்த மிதி வெடியில் சிக்கி 7 பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டனர்.

ஜார்க்கண்ட் மாநிலம் லெதகர் மாவட்டத்தில் அமுதிகார் கிராமத்தில் மாவோயிஸ்டுகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து சி.ஆர்.பி.எப். பிரிவு பொலிஸார் அந்த இடத்தை சுற்றி வளைக்க சென்றனர். அப்போது மலை உச்சியில் பதுங்கியிருந்தமாவோயிஸ்டுகள் பாதுகாப்புபடையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதற்கு பதிலடியாக பாதுகாப்புப்படையினரும் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இரு தரப்பிலும் கடும் துப்பாக்கிச்சண்டை நடந்தது. எனினும் அப்பகுதியில் நிலக் கண்ணி வெடி வெடித்ததால் 7 பாதுகாப்புப்படையினர் பலியானதாகவும், 9 பேர் காயமடைந்ததாகவும், ஜார்க்கண்ட் மாநில பொலிஸ் டி.ஜி.பி. ஜி.எஸ்.ராத் கூறினார்.

# அசிட் வீச்சுக்கு இலக்கான பெண்ணின் பரிதாபம்



ஒரு தலைக்காதலை நிராகரித்ததால் அசிட் வீச்சுக்கு ஆளான பெண், மருத்துவ செலவிற்கு பணமில்லாமல் அரசு உதவியை நாடியிருக்கிறார்.


புதுச்சேரி மாநிலம், காரைக்காலில் ஒரு தலைக் காதலை நிராகரித்த வினோதினி என்ற 23 வயது இளம்பெண் மீது சுரேஷ் என்பவர் கடந்த நவம்பர் மாதம் 14ஆம் திகதி அசிட் வீசப்பட்ட கொடூர சம்பவம் நடந்தது.

இதனால் தன்னுடைய இரண்டு கண் பார்வையை முற்றிலுமாக இழந்த வினோதினி, இப்போது தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு எதிராகவும், மருத்துவ செலவுகளுக்கும் போராடி வருகிறார்.

ஒரு தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை செய்யும் வினோதினியின் தந்தை மருத்துவச்செலவுகளுக்கு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இதுபோன்ற அசிட் வீச்சுக்கு ஆளாகும் பெண்களின் மறுவாழ்வுக்கு அரசு உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

# பாபா சமாதியை அவமதித்த டாக்டருக்கு தர்ம அடி



ஆந்திர மாநிலம் புட்டபர்த்தி சாய்பாபா ஆசிரமத்தில் உள்ள சாய்பாபா சமாதியில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வழிபட்டு வருகிறார்கள்.

புட்டபர்த்தியில் சாய்பாபா ஆசிரமம் நடத்தி வரும் சிறப்பு மருத்துவமனையில் அசாம் மாநிலம் சவுகாத்திதைச் சேர்ந்த டாக்டர் நவ்ஜித்(வயது 41) 6 1/2 ஆண்டுகளாக இருதய நோய் நிபுணராக பணியாற்றி வருகிறார். நேற்று மாலை சாய்பாபா சமாதியில் வழிபட்ட அவர் திடீர் என சமாதியை நெருங்கி நின்று சிறுநீர் கழிக்க முயன்றார்.

டாக்டரின் இந்த செயலால் அங்கு நின்ற தொண்டர்களும், பக்தர்களும் அதிர்ச்சி அடைந்தனர். பின், அவர்கள் பாய்ந்து சென்று டாக்டரை தாக்கி பொலிஸில் ஒப்படைத்தனர். இவ் விசாரணையில் குறித்த டாக்டர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று தெரியவந்தது.

(5ஆம் பக்க தொடர்ச்சி...)

## மக்கள்....

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிப்பீட மேறியதும் நிலைமை தலைகீழாக மாறியது. சர்வதேச அழுத்தத்தைக் கருத்திற்கொள்ளாத ஒரு ஜனாதிபதியை முதன் முதலாகப் புலிகள் இயக்கம் எதிர்கொண்டது. தமது வழமையான தந்திரோபாய நகர்வின் மூலமாக மகிந்த ராஜபக்ஷவையும் கையாளலாமெனப் புலிகள் நம்பினர். 1990 களின் முற்பகுதியில் ரணசிங்க பிரேமதாசாவுடன் பகடையாட்டம் நிகழ்ந்ததைப்போல மகிந்த ராஜபக்ஷவுடன் பகடையாடலாமெனப் புலிகள் நினைத்தனர். புலிகள் மகிந்த ராஜபக்ஷவை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடங்கினர். அந்நடவடிக்கைகளையெல்லாம் புலிகளை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்தும் வாய்ப்பாக மகிந்த திசை மாற்றினார்.

கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக புலிகள் மகிந்தாவை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்த மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கைக்குமான எதிர்விளைவு புலிகளை மிக மோசமாக உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்துவதாயிருந்தது. இதைப் புலிகள் முன்னொரு காலத்திலும் எதிர்நோக்கியதில்லை யென்பதால் அவர்கள் முழுமையாகக் குழப்பமடையத் தொடங்கினர். எப்போதும் அவர்களிடமிருந்த மாற்றுவழி யுத்தம் தான். அவர்கள் இறுதி யுத்தத்திற்குத் தயாரான போது போதிய படைப் பலத்தைக் கொண்டிருக்காமையால் மக்களைக் கட்டாயப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடுத்துவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது. ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போல் தமிழீழ விடுதலைப் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டிருந்தால் மக்களைக் கட்டாயப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடுத்த வேண்டிய அவசியமேதுமில்லை. அத்தவறு இவ்வாறு மக்களை யுத்தத்திலீடுபடுத்திய போது அது வெற்றியளிக்கத் தவறியதோடு மக்கள் புலிகளுக்கு எதிரானவர்களாக மாறினர். இதனால் புலிகளின் அடுத்த கட்ட நகர்வு மக்களைப் பணயக் கைதிகளாக வைத்து யுத்தத்தை முன்னகர்த்தும் மோசமான தந்திரோபாயமாக உருவெடுத்தது. இத்தந்திரோபாயமும் வெற்றியளிக்கவில்லை. இதனால் மேலும் செய்வதறியாது குழப்பமடைந்த புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் செல்ல முயன்ற மக்களைச் சுட்டுக்கொலை செய்ய வேண்டியேற்பட்டது. உண்மையில் மக்களைப் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தி யுத்தத்தில் பலியிட்டதை எக்காலத்திலும் எவ்விதத்திலும் நியாயப்படுத்திவிட முடியாது.

( நன்றி: மகுடம்)

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்


..........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# செவ்வாய் கிரகத்தில் நவீன நகரம்

## 80 ஆயிரம் பேர் தங்கும் வசதி



செவ்வாய் கிரகத்தில் 80 ஆயிரம் பேர் தங்கும் வகையில் நகரமொன்று உருவாகிறது.

செவ்வாய் கிரகத்தில் சிறு நகரம் அமைக்க முடிவு செய்துள்ளார் பேபால் நிறுவனரும், ஸ்பேஸ எக்ஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரியுமான எலான் முஸ்க்.

இந்த குடியேற்றம் பற்றி லண்டன் ராயல் ஏரோநாட்டிகல் சொசைட்டியில் பேசிய முஸ்க், செவ்வாய்கிரகத்தில் சைவ உணவுப் பிரியர்களுக்கு மட்டும்தான் அனுமதி.

அங்கு முதலில் குடியேறுவோர், தாங்கள் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

இதற்காக செவ்வாய் கிரகத்தில் செங்குத்தாக தரையிறங்கக்கூடிய விண்கலங்களை தயாரிக்க வேண்டியுள்ளது.

அத்துடன் விண்கலங்களை மீண்டும் மீண்டும் பயணத்துக்கு பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்த வசதிகளுடன் கூடிய "பால்கன்-9" என்ற விண்கலத்தை நாசா தயாரித்து வருகிறது.

செவ்வாய் கிரகத்தில் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் 80000 பேர் குடியேறுவார்கள். அவர்கள் அங்கு சுயசார்புள்ள புதிய நாகரிகத்தை உருவாக்குவார்கள் என்றும் நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

இதற்கிடையே செவ்வாய் கிரகத்தில் குடியேறுவதற்கான கட்டணம் 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டனின் இளவரச தம்பதிக்கு அரண்மனையை பரிசளித்த எலிசபெத்



பிரிட்டனின் இளவரச தம்பதியான வில்லியம்- கேட் மிடில்டனுக்கு அரண்மனையை பரிசாக வழங்க ராணி எலிசபெத் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரிட்டன் அரச குடும்பத்திற்கு ஏராளமான சொத்துக்கள் உள்ளன. இந்த சொத்துகளுக்கு அதிபதியாக ராணி எலிசபெத் இருக்கிறார்.

இவற்றில், லண்டன் சந்திரிகாம் பண்ணையில் உள்ள அழகிய ஆன்மர் அரங்கை வில்லியம்- கேட் மிடில்டனுக்கு பரிசாக வழங்க ராணி எலிசபெத் திட்டமிட்டுள்ளார்.

தங்கள் முதல் வாரிசுக்காக காத்திருக்கும் வில்லியம் தம்பதிக்கு, இது ஒரு நினைவுப்பரிசாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இங்கு தான் வில்லியம்- கேட் இருவரும் திருமணத்திற்கு பிறகு முதலாவது கிறிஸ்மஸை கொண்டாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# அவுஸ்ரேலியாவில் காட்டுத் தீ 100 பேரைக் காணவில்லை



அவுஸ்ரேலியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ பல்வேறு இடங்களுக்குப் பரவி பெரும் நாசம் ஏற்படுத்தி வருகிறது. 3,000இற்கும் அதிகமானோர் அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் 100 பேரைக் காணவில்லை. அவுஸ்ரேலியாவின் தெற்குப் பகுதியான டாஸ்மானியா மாகாணத்தில், அதிக வெப்பம் காரணமாக, காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. வனத்தின் பெரும்பாலான இடங்களில் பற்றி எரியும் தீ, குடியிருப்புப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது. 40இற்கும் மேற்பட்ட இடங்களில் தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பாதிப்புக்குள்ளான பகுதிகளில் அனைத்துக் கட்டடங்களிலும் மீட்புப் படையினரும், பொலிஸாரும் பொதுமக்கள் யாராவது சிக்கியிருந்தால் அவரகளைக் காப்பாற்ற தேடி வருகின்றனர். 100இற்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை. இதில் சில பேர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று காவல்துறை ஆணையர் ஸ்காட் தில்யார் தெரிவித்துள்ளார். முதல்கட்ட தேடுதலில், சடலங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

# பேஸ்புக்கில் தொலைபேசி கனடாவில் பரிசோதனை



பேஸ்புக் இணையதளம் ஒரு புதிய தொழில்நுட்பத்தை முதன் முதலில் கனடாவில் பரிசோதனை செய்ய முடிவு செய்துள்ளது. மார்ட் மற்றும் ஆண்ட்ராய்ட் போன் வைத்திருப்பவர்கள் இலவச தொலைபேசி அழைப்புகளை எடுக்கலாம். பேஸ்புக்கின் இந்த புதிய தொழில்நுட்பத்தில் இணையத்தின் வழியே கட்டணம் ஏதுமின்றி தொலைபேசி அழைப்புகளை அழைத்து பேசிக்கொள்ளலாம். மேலும் வாய்ஸ் மெயில் எனப்படும் குரல் பதிவையும் இலவசமாக அனுப்பும் வசதியும் உள்ளது. இவையிரண்டிற்கும் கட்டணம் ஏதும் இல்லை.

உலகின் எந்த பகுதிக்கு வேண்டுமானாலும் இலவசமாகவே உபயோகப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் இந்த வசதி சாதாரண போன் வைத்திருப்பவர்கள் உபயோகிக்க முடியாது. ஆண்ட்ராய்ட், ஆப்பிள், மற்றும் ஸ்மார்ட் போன் வைத்திருப்பவர்கள் இந்த புதிய வசதியின் மூலம் பயன்பெறலாம்.

# பிரான்ஸில் நிலநடுக்கம் அதிர்ச்சியில் மக்கள்



பிரான்ஸின் தென்மேற்கு பகுதியான லூர்தெஸ் நகரில் நேற்று தொடர்ச்சியாக நான்கு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

பிரான்ஸ் நேரப்படி நள்ளிரவு 12.26 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டதாக பிரெஞ்சு ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மேலும் இந்நிலநடுக்கம் கத்தோலிக்க புனித தளமான லூர்ரெஸில் இருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ளதாகவும், இதன் பாதிப்பு 30 கிலோமீற்றர் தூரம் வரை உணரப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இதனால் உயிர்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அல்கொய்தாவின் அட்டூழியம் அதிகரிப்பு; கனடாவிடம் உதவிகோரும் ஆபிரிக்க ஒன்றியம்



அல்கொய்தாவின் அட்டூழியம் அதிகரித்துவிட்டதால், மாலி நாட்டுக்கு உதவி புரியும்படி கனடாவை ஆபிரிக்க ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

கனடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரை ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவர் தாமஸ் போனியாயி இந்த வாரம் ஒட்டாவாவில் சந்திக்கவுள்ளார்.

அப்போது மாலிப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர் வடக்கு ஆபிரிக்காவின் உள்ள பெனின் நாட்டின் ஜனாதிபதியும் ஆவார்.

இந்நிலையில் கனடிய பாதுகாப்பு துறை அமைச்சர் ஆபிரிக்க படைகளுக்கு, தங்கள் நாட்டு இராணுவம் பயிற்சி அளிக்க தயார் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதன்படி கனடாவிலிருந்து பல்வேறு உதவிகளை பெற்று வந்த ஆபிரிக்க நாடுகள், தற்போது இராணுவ உதவியும் கோரியுள்ளது.

## மன்னருக்கு எதிராக கருத்து பத்திரிகையாளருக்கு சிறை



டுவீட்டரில் அவதூறு பரப்பியதாக பத்திரிகையாளர் ஒருவர் குவைத்தில் சிறை வைக்கப்பட்டார். வளைகுடா நாடான குவைத் நாட்டில் சமூக வலைதளங்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அயாத் அல்-ஹர்பி என்ற பத்திரிகையாளர் சமூக வலைதளமான டுவீட்டரில், குவைத் மன்னராட்சி பற்றியும், மேற்குல நாடுகளுடன் அவர்கள் ஏற்படுத்தியுள்ள நட்புறவு பற்றியும் அவதூறு பரப்பியாக குற்றம்சாட்டப்பட்டது. இது தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றம் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இது போன்று பத்திரிகையாளர்கள் ஒருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது இது இரண்டாவது முறை.

# வவுனியாவில் தலையெடுக்கும் டெங்கு
# கடந்த வாரம் குழந்தை உயிர்ப்பலி

வவுனியாவில் மீண்டும் டெங்கு அபாயம் நிலவுவதால் பொதுமக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியும் வவுனியா மாவட்ட தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரியுமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் கடந்த வருடம் 82 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியதாக தகவல்கள் கிடைத்தன. இவர்களில் 72 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். எனினும் உயிரிழப்புக்கள் எதுவும் இடம் பெறவில்லை.

இவ்வருடத்தில் இதுவரையில் 3 பேர் டெங்கு நோய் தாகத்திற்குள்ளாகியுள்ளனர். வவுனியாவில் தோணிக்கல்லை சேர்ந்த 3 வயதுக் குழந்தையொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை டெங்கு நோயால் உயிரிழந்துள்ளது.

எனவே டெங்கு தாக்கம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளமையால் பொதுமக்கள் நுளம்புபெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக நுளம்புகள் பெருகாதவாறு நீர் தேங்கி நிற்கும் இடங்களை முழுமையாக சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நீர் தேங்கி நிற்கும் பொருட்களை நிலத்தில் வெட்டி புதைத்தல் வேண்டும். அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் குப்பை அள்ளும் வாகனங்களில் இடுதல் வேண்டும். நீர்த் தாங்கிகளின் மூலமாகவும் நுளம்புப் பெருக்கம் ஏற்படுவதால் அவற்றை 5 நாளுக்கு ஒருமுறை முழுமையாக துப்பரவு செய்ய வேண்டும்.

இதேவேளை, ஒருவருக்கு காய்ச்சல் ஏற்படும்போது அவர் தகுதியான வைத்தியரையோ அல்லது வைத்தியசாலையையோ நாடவேண்டும் என்றார்.

# முதியோர் இல்லத்தில் வயோதிபர் மரணம்

(திருநெல்வேலி)

கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்ட வயோதிபர் ஒருவர் ஐந்தாவது நாளிலேயே அவ் இல்லத்தில் மரணமானார். கல்யாணமாகாத, தனியாளான இவரை வயோதிப உறவினரான இராஜபூதி என்னும் 72 வயது மூதாட்டி பராமரித்து வந்தார்.

தொடர்ந்தும் இவரைப் பராமரிப்பதற்கு முடியாமையினால் கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் சிபார்சின் பேரில் விஸ்வலிங்கம் சிவயோகநாதன் என்பவர் கைதடி முதியோர் இல்லத்தில் இவரைக் கூட்டிவந்து இணைத்துவிட்டார்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த விஸ்வலிங்கம் உருத்திரலிங்கம் என்னும் 62 வயதுடைய இம் முதியவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

தன்னை இவ்வளவு நாட்களும் அன்புடன் பராமரித்து வந்த உறவினரிடமிருந்து பிரிந்து வந்தமையினால் இம் முதியவர் மிகுந்த வேதனையுடன் காணப்பட்டதை உணரமுந்ததாக இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். வயோதிபர்களை சடுதியாகக் கைவிடுவதினால் அவர்கள் அதிக மனத்தாங்கலுக்கு உள்ளாவதாகவும் இதனால் அவர்கள் அதிக தாக்கத்துக்கு உட்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (137)

## வாழ்வின்...

தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் குறித்த சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சட்டமூலத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் நேற்று செவ்வாய்க் கிழமை, நாடாளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## நியமனம்...

ஆகிய துறைகளில் பட்டம் பெற்று பட்டதாரி பயிலுனர் சேவையில் உள்வாங்கப் படாதவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். பட்டதாரி பயிலுனர் நியமனம் வழங்கப்பட்டபோது அவற்றில் நியமனம் பெறாதோர் மற்றும நியமனம் பெறத்தவறியோர் பலரும் தமது நிலை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இந்நிலையில் மேற்படி பாடநெறிகளை கற்பிப்பதில் வெற்றிடங்கள் நிலவுவது தொடர்பான விடயங்கள் அமைச்சருக்கு தெரியப் படுத்தப்பட்டது.

இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சர், வடமாகாண ஆளுநர் உள்ளிட்டோருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை அடுத்தே நியமனம் பெறத்தவறிய பட்டதாரிகளின் விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஏனைய திணைக்களங்களில் முகாமைத்துவ உதவியாளர்களாகவும் திட்ட அலுவலர்களாகவும் தற்சமயம் கடமையாற்றுவோர் ஆசிரிய சேவையில் தம்மை இணைத்துக்கொள்ள விரும்பினால் தமது விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை 18 ஆம் திகதிக்கு முன்னதாக வட மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## வடக்கில்...

மணியளவில் இடியுடன் கூடிய கனமழை பெய்துள்ளதுடன் இடி, மின்னல் மிக தாழ்வாக ஏற்பட்டதால் கனகராயன் பாடசாலையில் அனர்த்த பாதுகாப்பு ஒலி எழுப்பப்பட்டதுடன் மாணவர்கள் பாதுகாப்பாக சுவரகளின் கரையாக அமர்த்தப்பட்டனர்.

இதேவேளை, பெரியகுளம் பிரதேசத்தில் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளமையால் இடி, மின்னல் தாக்கம் குறைவாக காணப்பட்டதாகவும் எனினும் நேற்றையதினம் மிக தாழ்வாக இடி மின்னல் ஏற்பட்டதால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்படடுள்ளது. இதேவேளை இந்த இடி, மின்னல் தாக்கத்தால் மின்சாரம் முற்றுமுழுதாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக ஏற்கனவே பெய்த மழையால் வீடுகள் சேதமடைந்து மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டதுடன் அவர்கள் தற்போது தமது வீடுகளைத் திருத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட போதிலும் தற்போது மீண்டும் கனமழை பெய்வதால தாம் அவற்றை சீர்செய்ய முடியாதுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண வசதிகள் பிரதேச செயலகங்களால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் மலையாளபுரம், பன்னங்கண்டி ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தால் தற்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 30.9 அடியாகக் காணப்பட்ட போதிலும் இந்த நீர்மட்டம் திடீரென நேற்று 31.5 அடியாக உயர்ந்தது. இக்குளத்தின் ஆறு வான் கதவுகள் அரை அடி அளவுக்குத் திறந்துவிடப்பட்டிருப்பதாகவும், நேற்று மட்டும் கிளிநொச்சியில் 85 மில்லி மீற்றர் மழை பெய்ததாகவும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் திட்டப்பணிப்பாளர் சுதாகர் தெரிவித்தார்.

அதேவேளை வவுனிக்குளமும் நிரம்பி வழிகிறது. நேற்று முதல இக்குளமும் வான்பாய விடப்பட்டுள்ளது. அதேவேளை அம்பாள் நகர் சாந்தபுரத்தில் 7 குடும்பங்களும், பன்னங்கண்டியில் 7 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் இடம்பெயர்ந்த அனைவரும் தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ நிலையங்களின் உதவிப் பணிப்பாளர் சுகுணதாஸ் தெரிவித்தார். அத்துடன் முல்லை மாவட்டத்திலும் கனமழை தொடர்வதால் அங்கும் மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கிறது.(கே,12,142,பா)

# பிரதேச சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் குதிப்பு

### சுழிபுரம் உப அலுவலகத்தில் பணிகள் பாதிப்பு

(சுழிபுரம்)

வலி. மேற்கு பிரதேச சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்களின் அடாவடித்தனத்தால் இப்பிரதேச பையின் சுழிபுரம் உப அலுவலகங்கள் பணிப்பகிஷ்கரிப்புச் செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த உப அலுவலகத்துக்குச் சென்ற ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் அங்கு கடமையில் இருந்த ஊழியர்களைத் தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார்.

இதனால் மனம் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாக நேற்று முன்தினம் தமது அலுவலகத்துக்கு முன்னால் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து அங்கு விரைந்த பிரதேச சபையின் தவிசாளர் ஊழியர்களை சமாதானம் செய்ய முயற்சித்தார்.

நடந்த தவறுக்காகத் தான் மன்னிப்புக் கோருவதாக தவிசாளர் தெரிவித்ததைத் தொடர்ந்து பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது.

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அதிகாரிகளுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெறவிருந்தது.

எனினும் இக்கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அவசர...

குமார திஸாநாயக்க, விஜித்த ஹேரத் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோர் இந்த கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

## குற்றப்...

அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டிருந்தனர். பேரணியாக வருகை தந்தவர்கள் கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் ஒன்று கூடி குற்றப் பிரேரணையை வாபஸ் பெற்று ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி எதிர்ப்பு கூட்டமொன்றிலும் கலந்துகொண்டனர்.

## சீரற்ற...

டக்ளஸ் தேவானந்தாவும் ஜனாதிபதி செயலகமும் உறுதி செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொள்ளவிருந்த ஜனாதிபதி, யாழ். வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நான்குமாடிக் கட்டடமொன்றைத் திறந்து வைக்கவிருந்தார் என்பதும் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி விழாவொன்றிலும் பங்கேற்கவிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலைக் கழக...

தெரிவித்தன. இங்கு கல்வி பயிலும் மாணவர்களில் கணிசமான தொகையினர், வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இதனால் அவர்கள் விரிவுரைகளுக்கு வந்து சேர்வதற்கு ஓரிரு தினங்கள் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உல்லாச...

சொந்த தேவைகளையோ அன்றி அரசியல் தேவைகளையோ எதிர்பார்க்கவில்லை. உங்கள் தாய் தந்தையர்கள் உங்களுக்கு வழங்கும் அறிவுரைகள் போலவே எனது கருத்துக்களையும் நான தெரிவிக்க விரும்புகின்றேன். கற்றவர்களாகிய உங்களுக்கு அறிவுரைகள் தேவையில்லை. உங்கள் நலன் கருதி சில வழிமுறைகளையே நான் கூற விரும்புகிறேன். இறந்துபோன உறவுகளுக்கு உங்கள் இல்லங்கள் தோறும் அச்சலி செலுத்துவதை நான் தவறு என்று கூறவில்லை. ஆனாலும் பல்கலைக் கழகத்தினுள் நீங்கள் அஞ்சலி செலுத்துவதையும், அதனால் உங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களையும் வைத்து சுயலாப அரசியல் நடத்துவதற்கு சிலர் காத்திருக்கிறார்கள். இதைவைத்து எமது வாழ்விடங்கள் தோறும் மறுபடியும் வன்முறைகளை தூண்டிவிடுவதே அவர்களது கபட நோக்கம். மறுபடியும் ஒரு வன்முறை சூழலுக்குள் உங்களை இழுத்துவர நினைப்பவர்களின் பிள்ளைகளும், குடும்பத்தவர்களும் உலக நாடுகளில் உல்லாச வாழ்க்கை நடத்துகிறார்கள். வன்முறைகளை எமது மண்ணில் தூண்டிவிட்டு அவர்கள் வெளிநாடுகளுக்கு பறந்து விடுவார்கள். வன்முறைகளின் வலிகளையும், வதைகளையும் தாங்கி நிற்கவேண்டியவர்கள் நீங்களும் அப்பாவி மக்களுமே. இதுதான் கடந்த காலங்களிலும் இங்கு நடந்து முடிந்திருக்கிறது. வன்முறைகளை தூண்டுவோரும், அவர்களது குடும்பத்தவர்களும் வன்முறைகளின் வலிகளை ஒருபோதும் அனுபவித்தவர்கள் அல்ல. இன்று அமைதிதரும் சூழல் ஒன்று உருவாகியிருக்கிறது. இதற்காக எமது தமிழ்பேசும் சமூகமும் அதிகவிலை கொடுத்திருக்கிறது. இந்தச் சூழலை பாதுகாக்க வேண்டிய கடமை உங்களுக்கும் உரியது. அழிவாயுதங்கள் எமது உறவுகளை வதைத்தது போதும். நான் சொல்லும் அறிவாயுதத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். படிப்பதற்காக போராடுங்கள். அரசியல் உரிமை முதற்கொண்டு நீங்கள் கற்பதற்கான சகல வசதிகளையும் வாதாடி பெற்றுதர நான் தயாராக இருக்கின்றேன். அதற்காக யாரும் வனமுறையில் ஈடுபடவேண்டும் என்றோ மறுபடியும் இங்கு இரத்தம் சிந்தவேண்டும் என்றோ நான் விரும்பவில்லை. வியர்வை சிந்த விரும்பினால் மட்டும் வாருங்கள் வரவேற்போம். உங்களை பெற்று வளர்த்து அழிவு யுத்தத்தின் மத்தியிலும் பல்கலைகழகம் அனுப்பிய உங்கள் தாய், தந்தையரின் கனவுகளை நிறைவேற்றுங்கள். படியுங்கள், பட்டம் பெறுங்கள், கல்விமான்களாக நிமிருங்கள். அதற்காக அரசியலில் ஈடுபட வேண்டாம் என்று நான் கூறவில்லை. உங்கள் மதிநுட்ப சிந்தனையில் மட்டும் விரும்பினால் அரசியலிலும் ஈடுபடுங்கள். எனது அனுபவங்களை அடிப்படையாக கொண்டே இதை உங்களிடம் கூறுகின்றேன். நீங்கள் நல்லதொரு சமிஞ்ஞை தந்தால் உங்களது சக மாணவர்களின் விடுதலைக்காக நான் ஜனாதிபதியுடன் பேசி முவெடுக்கவும் தயாராக இருக்கிறேன். கல்வியை தொடர முன்வாருங்கள் என்று நான் உங்கள் பக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

# குற்றப் பிரேரணைக்கு எதிராக ஐ.தே.கட்சி வாக்களிக்கும்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்ராடநாயக்கவிற்கு எதிரனா குற்றப் பிரேரணை வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற குழு எதிர்த்து வாக்களிக்கத் தீர்மானித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய தீர்மானங்கள் குறித்தும் கட்சியின் நாடாளுமன்ற குழு கலந்துரையாடியுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

குறிப்பாக, நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு, அரசியலமைப்பிற்கு எதிரானது என்றும் சட்டத்திற்கு முரணானது என்றும் உயர்நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, தெரிவுக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாத போதிலும் அரசாங்கம் அதனை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அறியக்கிடைத்துள்ளது.

எனவே, இது தொடர்பாக நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளது.



உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு மதிப்பளிக்காமல் அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைக்கு எதிராக குற்றப் பிரேரணை வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக நாடாளு மன்றத்திற்கு தெரிவாகியுள்ள அனைத்து உறுப்பினர்களும் வாக்களிக்க வேண்டுமென நேற்று நடந்த கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறது இராணுவம்

(கொழும்பு)

மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையுமில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.



பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகளின் போது ஒரு சிறிய ளவிலான பயிற்சிகள் மட்டுமே மாணவர்களுக்கு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இலங்கை ஆசிரியர் ஒன்றியம், இலங்கை ஆசிரியர் சேவைகள் ஒன்றியம் ஆகியன பிழையான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இராணுவ முகாம்களில் பயிற்சி வழங்கப்பட்டாலும் பல்கலைக்கழக பேராசிரியர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுமே பயிற்சிகளுக்கான நிர்வாகம் செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உயர்கல்வி அமைச்சின் கொள்கைகளுக்கு அமைவான முறையில் பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன.

இலங்கையில் ஒரே தடவையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியருக்கு தங்குமிட வசதிகளை வழங்கக்கூடிய ஒரே இடமாக இராணுவ முகாம்கள் காணப்படுவதனால் தலைமைத்துவப் பயிற்சிகளை முகாம்களில் நடத்துவதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சியின் வரலாற்றை ஆவணப்படுத்த நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையையும் கலாசாரத்தையும் ஆவணப்படுத்தும் முகமாக புலமைசார்ந்தோரிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் சேகரிக்கப்பட்டு அவற்றை ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட செயலகம் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக சேகரிக்கப்பட வுள்ள ஆய்வுக்கட்டுரைகள் தொடர்பான மேலதிக விபரங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தினமுரசில் எதிர்பாருங்கள்.

# தீர்ப்புகளுக்கு மதிப்பளிக்குமாறு நீதிபதிகள் சங்கம் கோரிக்கை

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் உயர்நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் வழங்கியுள்ள தீர்ப்புகளுக்கு மதிப்பளிக்குமாறு அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுப்பதாக மஜிஸ்திரேட் மற்றும் மாவட்ட நீதவான்கள் அடங்கிய நீதிமன்ற சேவைச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் சட்டத்தை வியாக்கியானம் செய்யும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கே உள்ளது. அதற்கு அனைத்துத் தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்வதாக அச்சங்கம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

சிற்சில ஊடகங்கள் வாயிலாக நீதியரசர்களுக்கு எதிராக பிரசுரிக்கப்படும் செய்திகள் தொடர்பிலும் தமது சங்கம் கவனம் செலுத்தி வருகின்றது என்றும் நீதிமன்ற சேவைச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# புத்தூரில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இனந்தெரியாத நபர்கள் அவரது வீட்டுக்குள் புகுந்து நேற்றிரவு 8.45 மணியளவில் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த குறித்த நபர் கோப்பாய் வைத்தியச்சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்கான யாழ். போதனா வைத்திசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் சதிஸ்குமார் என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (25)

# வாழ்வின் எழுச்சியைக் கண்டு கூட்டமைப்பு அஞ்சுகிறது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

'வாழ்வின் எழுச்சி' திட்டத்தின் ஊடாக தமிழ் மக்கள் தமது பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதன்மூலம் வாழ்க்கைத் தரத்தில் முன்னேறி விட்டால் தமது போலி அரசியல் நாடகம் பொய்த்து விடும் என்று தமிழ்த் சேதியக் கூட்டமைப்பு அஞ்சுகின்றது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் நேற்று உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் அங்கு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

எமக்குக் கிடைத்த அரசியல் பலத்திற்கு ஏற்றவாறு எமது மக்களின் அபிவிருத்தி முதற்கொண்டு அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கைகளிலும் நாம் அயராது உழைத்து வந்திருக்கின்றோம்.

எமது மக்களுக்கான அரசியல் உரிமை குறித்து தொடர்ச்சியாக எங்கள் குரல்கள் ஒலித்தே வந்திருக்கின்றன. அதற்காக நாம் அயராது உழைத்தே வருகின்றோம்.

எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற விரும்புகின்றோம். தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்பது வெறுமனே அரசியல் தீர்வோடு மட்டும் சம்பந்தமானது அல்ல.

வடக்கு, கிழக்கு உட்பட இலங்கைத் தீவெங்கும் அரசாங்கத்தால் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களையும் உள்ளடக்கியதே இந்த வாழ்வின் எழுச்சித் திட்டம்.

வாழ்வின் எழுச்சித் திட்டம் மாகாணங்களுக்கான அதிகாரங்களை பறிப்பதற்கு நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. அவ்வாறான ஒரு செயலில் அரசாங்கம் இறங்கப் போவதுமில்லை.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தை எமது மக்களின் பிரதிநிதிகளாக பொறுப்பேற்று நாமே எமது மக்கள் மத்தியிலும் நடைமுறைப் படுத்தி வருகின்றோம். இதைக் கண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அச்சப்படுகிறது.

அரசியல் உரிமைகளுக்கான எமது இலட்சியக் கனவுகளை நிறைவேற்றும் நடைமுறை சாத்தியமான வழிமுறைநோக்கி தமிழ் பேசும் மக்கள் முன்னேறி வருகிறார்கள்.

அழிவு யுத்தகாலத்தில் அப்பாவி மக்களின் பிணங்களை வைத்து அரசியல் நடத்தியவர்கள் இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். மண்டையோடுகளில் அமுதபானம் ஏந்திப்பருகி ருசித் தவர்கள் இந்தக் கூட்டமைப்பினர்.

அழிவுயுத்தம் முடிந்துவிட்டது என்றும் பிணங்கள் இங்கு விழவில்லை என்றும் இப்போது அவர்கள் துயரப்படுகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பரீட்சைக்குத் தோற்றமுடியாத மாணவர்கள் விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நிலவிய சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளப்பெருக்குகளால் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போன மாணவர்கள், பாடசாலை அதிபர் ஊடாக தமது தரவுகளை வழங்குமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மழையினால் டிசம்பர் மாதம் 17,18,19 மற்றும் 20 ஆம் திகதிகள் நடைபெற்ற பரீட்சைக்கு தோற்றாத மாணவர்களுக்காக விசேட பரீட்சைகள் நடத்தப்பட வுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைகளை பெப்ரவரி 9,10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக தமது தகவல்களை திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது தகவல்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பிலான மேலதிக தகவல்களை 0112 784 208, 0112 784 537, 0113 188 350, 0112 786 200, 0112 784 201 அல்லது 0112 784 204 என்ற இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிந்துகொள்ள முடியுமென பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 1911 என்ற விசேட இலக்கத்தின் ஊடாக தொடர்புகளை ஏற்படுத்தி இது தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்நீதிமன்றில் பணியாற்றுபவரே அடுத்த பிரதம நீதியரசராக வேண்டும்

## சரத் என்.சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அமைய தற்போதைய பிரதம நீதியரசர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டால், அடுத்த பிரதம நீதியரசராக உயர நீதிமன்றத்தில் பணியாற்றி வரும் நீதியரசர் ஒருவரே பிரதம நீதியரசராக நியமிக்கப்பட வேண்டும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

வெளி நபர் ஒருவரை பிரதம நீதியரசராக நியமித்தால், அதன் மூலம் மேலும் புதிய பிரச்சினைகள் ஏற்படக்கூடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

தொன்று தொட்டு, பிரதம நீதியரசர்களை நியமிக்கும் வழிமுறை இருந்து வருகிறது. சட்டமா அதிபர்களான சேர் அலன்ரோஸ், ஹேமா பஸ்நாயக்க, விக்டர் தென்னகோன் போன்றோர் மாத்திரமல்லாது தானும் அவ்வாறே நியமிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

1977 ஆம் ஆண்டு நெவில் சமரகோன் வெளியில் இருந்து பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதாகவும் இறுதியில் அவர் நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்நோக்க நேர்ந்தது.

நீதிமன்றத்தின் சிரேஷ்ட தரத்தை கவனத்தில் கொள்ளாது பாரிந்த ரணசிங்கவை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன பிரதம நீதியரசராக நியமித்தார்.

தற்போது நீதித்துறைக்கும், நாடாளுமன்றத்திற்கும் இடையில் அநாவசியமான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் நற்பெயர், அதன் பரிசுத்தம் என்பவற்றை பாதுகாக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், உயர்நீதிமன்றத்தில் பணிப்புரியும் சிரேஷ்ட நீதியரசர் ஒருவர், பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டால் மாத்திரமே அந்தப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும் என சில்வா கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.